Find us on facebook/tamilmirror   Follow us on tamilmirror   epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, SEPTEMBER 18 2024

புதன்கிழமை செப்டெம்பர் 18, 2024 | ஒளி: 10 கதிர் 053 | பக்கம்:08 | நகரப்பதிப்பு★ | FREE

## 4,411 முறைப்பாடுகள்

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரையில் 4,411 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்திற்கு 1,379 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையங்களுக்கு 3,032 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன.

தேர்தல் விதிமுறைகளை மீறியமை தொடர்பில் 4,000க்கும் மேற்பட்ட முறைப்பாடுகளும், வன்முறைச் சம்பவங்கள் தொடர்பில் 30க்கும் மேற்பட்ட முறைப்பாடுகளும் பதிவாகியுள்ளன.





## வெல்லவாயவில்...

சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தலைமையில், வெல்லவாயவில், திங்கட்கிழமை(16) ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற்றது.





## ஹெட்டிபொலவில்...

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தலைமையில் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் திங்கட்கிழமை(16) ஹெட்டிபொல நகரில் மிக வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டது.





## தலவாக்கலையில்...

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க தலைமையில் தலவாக்கலையில் ஞாயிற்றுக்கிழமை (15) நடைபெற்றது.



## கூட்டமைப்பில் இருவர் ரணிலுக்கு ஆதரவு

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களான சசிகலா ரவிராஜ் மற்றும் கலைஅமுதன் சேனாதிராஜா ஆகியோர் யாழ். தேர்தல் பிரசாரத்தின் போது, ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவை செவ்வாய்க்கிழமை (17) சந்தித்து, வடமாகாண அபிவிருத்தி வேலைத்திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடினர் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு அறிவித்துள்ளது.

## GMOA இன்று வேலை நிறுத்தம்

நாடு முழுவதிலும் உள்ள வைத்தியசாலைகளை இலக்கு வைத்து புதன்கிழமை(18) தொழிற்சங்க நடவடிக்கையொன்றை மேற்கொள்ளவுள்ளதாக அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கம் (GMOA) அறிவித்துள்ளது.

புதன்கிழமை (18) காலை 8 மணிக்கு வேலைநிறுத்தம் தொடங்க உள்ளதாகவும், இதனால் மருத்துவ சிகிச்சை வழங்குவதில் இடையூறு ஏற்படும் என்றும் அவர் கூறினார்.

தொடர்ச்சி P2

### தேர்தல் பிரசாரப் பணிகளுக்கு

# நள்ளிரவுடன் தடை

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரப் பணிகளுக்கு புதன்கிழமை(18) நள்ளிரவுடன் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க புதன்கிழமை(18) நள்ளிரவிற்குப் பின்னர் வேட்பாளர்கள், கட்சிகளுக்கான தேர்தல் பிரசாரம், பேரணி, துண்டுப்பிரசுர விநியோகம் மற்றும் வேட்பாளர்களை ஊக்குவிக்கும் வகையிலான செயற்பாடுகளில் ஈடுபடுபவர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகவும் தேர்தல்கள் ஆணையாளர் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு ஒரு கோடியே 71 லட்சத்து 40 ஆயிரத்து 354 பேர் தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு கொழும்பு மாவட்டத்திலிருந்து 1,765,351 பேரும், கம்பஹா மாவட்டத்திலிருந்து 1,881,129 பேரும், களுத்துறை மாவட்டத்திலிருந்து 1,024,244 பேரும், கண்டி மாவட்டத்திலிருந்து 1,191,399 பேரும், மாத்தளை மாவட்டத்தில் 429,991 பேரும், நுவரெலியா மாவட்டத்திலிருந்து 605,292 பேரும், காலி மாவட்டத்திலிருந்து 903,163 பேரும், மாத்தறை மாவட்டத்திலிருந்து 686,175 பேரும், அம்பாந்தோட்டை மாவட்டத்திலிருந்து 520,940 பேரும் தகுதி பெற்றுள்ளனர்.

தொடர்ச்சி P2



## வேட்பாளர் அனுரகுமாரவை பதற்றமடைய வைத்த புறா

பாறுக் ஷிஹான்

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திசாநாயக்கவினை புறா ஒன்றின் மூலம் பதற்றமடைய காரணமான இருவர் எச்சரிக்கை செய்யப்பட்டு சம்மாந்துறை பொலிஸாரினால் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

தொடர்ச்சி P2



## பசையை பொலிஸாரின் மீது கொட்டிவிட்டு ஓட்டம்

ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்கு சார்பாக பன்னல - எலபடகம பிரதேசத்தில் சட்டவிரோதமாக சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஜனாதிபதி வேட்பாளரின் எலபடகம பிரதேசத்தைச் சேர்ந்த ஆதரவாளர்கள் இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பன்னல பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

## விமானப்படை விளக்கம்

தேர்தல் பிரசாரத்திற்கு விமானப்படைக்குச் சொந்தமான விமானங்களைப் பயன்படுத்துவது குறித்து இலங்கை விமானப்படை விளக்கமளித்து ஊடக அறிக்கையொன்றை விடுத்துள்ளது.

2024ஆம் ஆண்டு நடைபெறவுள்ள தேர்தல் தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரத்திற்காக இலங்கை விமானப்படைக்குச் சொந்தமான விமானங்கள் தவறாகப் பயன்படுத்தப்பட்டமை தொடர்பில் அச்சு ஊடகங்களில் வெளியாகியுள்ள செய்திகள் தொடர்பில் விமானப்படையினரால் அவதானிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி வேட்பாளர்களின் தேர்தல் பிரசாரங்களின் போது அவர்களுக்குத் தேவையான விமானப் போக்குவரத்து வசதிகள், உத்தியோகபூர்வ நடைமுறைகளுக்கு இணங்க, கட்டண அடிப்படையில், நிலையான இயக்க நடைமுறைகளின்படி செய்யப்பட்டுள்ளதாக விமானப்படை வலியுறுத்துகிறது.

தொடர்ச்சி P2



## வினாத்தாளை பகிர்ந்த அறுவர் கைது

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சையின் முதல் வினாத்தாளை கையடக்கத் தொலைபேசி மூலம் பகிர்ந்ததாக கூறப்படும் அனுராதபுரத்தில் உள்ள பரீட்சை நிலையமொன்றில் உள்ள பாடசாலை அதிபர் உட்பட 6 ஆசிரியர்கள் பரீட்சை திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.


தொடர்ச்சி P2



## தம்பியை சுட்டுக்கொன்ற அண்ணன் கைது

### சம்மாந்துறையில் சம்பவம்

பாறுக் ஷிஹான்



வீடொன்றில் ஏற்பட்ட துப்பாக்கிச் சூட்டில் இளம் குடும்பஸ்தர் மரணமடைந்த சம்பவம் ஒன்று சம்மாந்துறை பொலிஸ் பிரிவில் இடம்பெற்றுள்ளது. அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட புறநகர் பகுதி ஒன்றில் உள்ள வீடு ஒன்றில் சகோதரர்களுக்கிடையில் ஏற்பட்ட துப்பாக்கி பிரயோகத்தில் ஒரு பிள்ளையின் தந்தையான பக்கீர் முகையதீன் றோஜான் (வயது 28) என்பவர் சம்பவ இடத்தில் உயிரிழந்துள்ளார்.

தொடர்ச்சி P2

## முறைப்பாடு செய்யுங்கள்

தேர்தல் விதிமுறை மீறல்கள் மற்றும் மோதல்கள் குறித்து முறைப்பாடு செய்ய விசேட தொலைபேசி இலக்கங்களை தேர்தல்கள் சிக்கல்களை தீர்க்கும் பிரிவு அறிமுகப்படுத்தியுள்ளது.

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# GMOA இன்று வேலை நிறுத்தம்

முறையான முறைப்பாடு எதுவுமின்றி GMOA ஊவா மாகாண இணைப்பாளரும் உதவிச் செயலாளருமான டொக்டர் பாலித ராஜபக்ஷவுக்கு எதிராக ஆரம்பிக்கப்பட்டுள்ள ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு எதிராக இந்த பணிப்புறக்கணிப்பு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக டாக்டர் விஜேசிங்க தெரிவித்தார்.

இந்த சம்பவம் தொடர்பான மறுசீரமைப்பு செயல்முறையைத் தொடங்குவதற்கு GMOA சுகாதார அமைச்சுக்கு 14 நாள் கால அவகாசம் வழங்கும் என்றும் அவர் கூறினார். இதற்குள் சாதகமான பதில் கிடைக்காவிட்டால், மாத இறுதியில் நடைபெறும் மத்தியக் குழுக் கூட்டத்தைத் தொடர்ந்து அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

# தேர்தல் பிரசாரப் பணிகளுக்கு நள்ளிரவுடன் தடை

மேலும், யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்து 593,187 பேரும், வன்னி மாவட்டத்திலிருந்து 306,081 பேரும், மட்டகளப்பு மாவட்டத்திலிருந்து 449,686 பேரும், திகாமடுல்ல மாவட்டத்திலிருந்து 555,432 பேரும், திருகோணமலை மாவட்டத்திலிருந்து 315,925 பேரும், குருணாகல் மாவட்டத்திலிருந்து 1,417,226 பேரும், புத்தளம் மாவட்டத்திலிருந்து 663,673 பேரும், அநுராதபுரம் மாவட்டத்திலிருந்து 741,862 பேரும், பொலன்னறுவை மாவட்டத்திலிருந்து 351,302 பேரும், பதுளை மாவட்டத்திலிருந்து 705,772 பேரும், மொனராகலை மாவட்டத்தில் இருந்து 399,166 பேரும், இரத்தினபுரி மாவட்டத்திலிருந்து 923,736 பேரும், கேகாலை மாவட்டத்திலிருந்து 709,622 பேரும் தகுதி பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

# விமானப்படை விளக்கம்

விமானப்படை ஊடக அறிக்கைகளில் உள்ள தகவல்களின் துல்லியத்தை உறுதிப்படுத்திய பின்னர் விமானப்படை மிகவும் துல்லியமான செய்தி ஊடகங்களைப் பயன்படுத்த முடியும் என்பதை மேலும் வலியுறுத்த விரும்புகிறோம் என்றும் குறிப்பிட்டுள்ளது.



# வினாத்தாளை பகிர்ந்த அறுவர் கைது



விசாரணைகளின்படி, பரீட்சை தொடங்குவதற்கு பத்து நிமிடங்களுக்கு முன்னர் முதல் வினாத்தாளின் புகைப்படங்களைத் தனிநபர்கள் பகிர்ந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

அதன்படி, காகிதத்தின் படங்களைப் பகிர்ந்ததாகக் கூறி உதவிக் கண்காணிப்பாளர் மற்றும் 6 ஆசிரியர்கள் அவர்களது கையடக்க தொலைபேசிகளுடன் கைது செய்யப்பட்டனர்.

ஒரு அதிபர் மற்றும் ஆசிரியர்கள் அனுராதபுரம் மற்றும் நொச்சியாகமவில் அமைந்துள்ள அரச பாடசாலைகளைச் சேர்ந்தவர்கள்.

இந்த வினாத்தாள் அனுராதபுரம், நொச்சியாகம, கொழும்பு உள்ளிட்ட பல பகுதிகளுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

புலமைப்பரிசில் பரீட்சை வினாத்தாளை கைத்தொலைபேசி மூலம் பிரதியெடுத்த சம்பவத்தை இலங்கை ஆசிரியர் சங்கத்தின் தலைவர் பிரியந்த பெர்னாண்டோ உறுதிப்படுத்தியுள்ளார்.

"பரீட்சை மீதான நம்பிக்கை உடைக்கப்பட்டுள்ளது. அதிகாரிகள் சட்டத்தைக் கடுமையாக அமல்படுத்த வேண்டும் மற்றும் வினாத்தாள் வெளியானதற்குக் காரணமான அனைவருக்கும் கடுமையான தண்டனை வழங்க வேண்டும்" என்று பெர்னாண்டோ கூறினார்.

எவ்வாறாயினும், 2024ஆம் ஆண்டிற்கான தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) நாடு முழுவதும் 2,849 பரீட்சை நிலையங்களில் நடைபெற்றது.

# வேட்பாளர் அனுரகுமாரவை பதற்றமடைய வைத்த புறா



தேசிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்டத்திற்கான சம்மாந்து றை தொகுதியில் தேர்தல் பிரச்சார கூட்டம் வெள்ளிக்கிழமை(13) நடைபெற்றிருந்தது.

இதன் போது அதிகளவான மக்கள் மத்தியில் ஜனாதிபதி வேட்பாளர் அனுரகுமார திஸாநாயக்க உரையாற்றிக் கொண்டிருந்தார்.

இதன் போது அவர் உரையாற்றிக் கொண்டிருந்த சந்தர்ப்பத்தில், மேடையை அண்மித்த வானத்திலிருந்து சிவப்பு நிற மின்னொளி பாய்ச்சப்பட்டு ஏதோவொரு மர்மப்பொருள் நகர்ந்து வந்துள்ளது.

இந்நிலையில் இக் கூட்டத்தில் பேசிக்கொண்டிருந்த தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் ஜனாதிபதி வேட்பாளருமான அநுரகுமார திஸாநாயக்க உடனடியாக உசாரடைந்ததுடன் தனது பாதுகாப்பு அதிகாரிகளின் ஆலோசனை க்கமைய பாதுகாப்பிற்காக மேடையிலிருந்து சிறிது நேரம் அகற்றப்பட்டார்.

பின்னர் கூட்டம் தொடர்ச்சியாக நடைபெற்று முடிவடைந்த பின்னர் சம்பவம் தொடர்பில் சம்மாந்துறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி கே.டி.எஸ் ஜெயலத் வழிகாட்டுதலில் பொலிஸ் நிலைய பெருங்குற்றப் பிரிவு பொறுப்பதிகாரி கே.சதீஸ்கர் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணை நடவடிக்கைகளை மேற்கொண்டிருந்தனர்.

இதன்போது கூட்டம் நடைபெற்ற பகுதியிலிருந்து LED LIGHT பொருத்திய 'புறா' பறந்து சென்றதை விசாரணை ஊடாக அறிந்ததுடன் அப்பகுதியில் புறா வளர்ப்பில் ஈடுபடும் 18 மற்றும் 19 வயது மதிக்கத்தக்க இரு இளைஞர்களைத் திங்கட்கிழமை (16) கைது செய்து விசாரணை செய்தனர்.

இதன் போது கைதானவர்கள் சமூக ஊடகங்களில் காணொளியைப் பதிவு செய்வதற்காக இரவு வேளையில் புறாவின் காலில் ஒரு வகையான மின் குமிழினை பொருத்தி அதனைத் தினமும் பறக்க விடுவதாக தமது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் கைதான இருவரையும் சம்மாந்துறை பொலிஸார் எச்சரிக்கை செய்து விடுதலை செய்ததுடன் சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

கைது செய்யப்பட்ட இளைஞன் ஒருவரின் தந்தையார் ஓய்வு பெற்ற முன்னாள் பொலிஸ் உத்தியோகத்தர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



# தம்பியை சுட்டுக்கொன்ற அண்ணன் கைது

திங்கட்கிழமை (16) இரவு 10.45 மணியளவில் குறித்த துப்பாக்கி பிரயோகம் இடம்பெற்றுள்ளதுடன், ரிப்பிட்டர் ரக துப்பாக்கியே குறித்த படுகொலைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

சம்பவம் தொடர்பில், தம்பி மீது துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டவர் என கூறப்படும் சந்தேக நபரான சகோதரரை சம்மாந்துறை பொலிஸார் கைது செய்து மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதுடன் சடலம் சம்மாந்துறை ஆதார வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மேலும் குறித்த துப்பாக்கி பிரயோகம் சகோதரர்களிடையே ஏற்பட்ட முன் விரோதம் காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா? அல்லது எதிர்வரும் ஜனாதிபதி தேர்தல் தொடர்பில் ஏற்பட்ட முரண்பாடு காரணமாக மேற்கொள்ளப்பட்டுள்ளதா? என பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# முறைப்பாடு செய்யுங்கள்

இந்த தொலைபேசி இலக்கங்கள் அறிமுகமானது, எதிர்வரும் 21ஆம் திகதி நடைபெறவுள்ள இலங்கையின் ஒன்பதாவது ஜனாதிபதித் தேர்தலை சுதந்திரமானதும் மற்றும் நியாயமானதுமான தேர்தலாக நடத்துவதற்கான சூழலை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

இதன்மூலம், வாக்குப்பதிவின் போது, இடம்பெறும் சட்டவிரோத செயற்பாடுகள் குறித்து பொதுமக்கள் முறைப்பாடு அளிக்க முடியும். அதற்கிணங்க, இராஜகிரியவில் உள்ள பொதுத் தேர்தல்கள் செயலகத்தில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள விசேட பிரிவை தொடர்பு கொள்ளுமாறு ஆணைக்குழு பொதுமக்களை கேட்டுக்கொண்டுள்ளது.

தொலைபேசி இலக்கங்கள்: 011 2796546, 011 2796549, 011 2796589 மற்றும் 011 2868153
பெக்ஸ் இலக்கங்கள், 011 2796533, 011 2796535 மற்றும் 011 2796537
வட்ஸ்அப் இலக்கம், 070 5396999

இ மெயில்: electiondr@gmail.com, pre2024@elections.gov.lk
பொலிஸ் பிரிவு: 011 2796536, 011 2796540 மற்றும் 011 2796544



# சர்வதேச அழகிப் போட்டியில் திலினி குமாரி முதலாம் இடம்

டி.கே.ஜி.கபிலா



இந்தோனேசியாவில் நடைபெற்ற 'மிஸ் இன்டர்நேஷனல் - 2024 சர்வதேச அழகிப் போட்டி'யில் கலந்து கொண்டு முதலாம் இடத்தைப் பெற்ற திலினி குமாரி கட்டுநாயக்க விமான நிலையத்தை, திங்கட்கிழமை(16) வந்தடைந்தார்.

இந்தோனேசியாவின் பாலி தீவில் உலகின் 20 நாடுகளைச் சேர்ந்த அழகு ராணிகள் பங்கேற்ற இந்தப் போட்டி 09/09 முதல் 09/16 வரை நடைபெற்றது.

இந்தப் போட்டியில் வெற்றி பெற்ற திலினி, இந்தோனேசியாவின் ஜகார்த்தாவிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸ் விமானமான UL-365 இல் கட்டுநாயக்க விமான நிலையத்தை வந்தடைந்தார்.

கண்டி, பிரிமத்தலாவ பிரதேசத்தை வசிப்பிடமாகக் கொண்ட இவர், நடிகையாகவும், அறிவிப்பாளராகவும் பல துறைகளிலும் தனது திறமைகளை வெளிப்படுத்தி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# புலமைப்பரிசில் பரீட்சை வழிகாட்டி நூல்கள்

அ.அச்சுதன்

திருகோணமலை மாவட்டத்திலிருந்து 2025இல் ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவரது பெறுபேறுகளை உயர்த்தும் நோக்கோடு, திருகோணமலை பட்டணமும் சூழலும் கோட்டத்தில் உள்ள செல்வநாயக புரம் இந்து மகா வித்தியாலயத்தில் கல்வி பயிலும் நான்காம் வகுப்பு மாணவருக்கு ஒவ்வொன்றும் 1,930 ரூபாய் பெறுமதியான ஆற்றல் என்னும் புலமைப்பரிசில் தேர்வு வழிகாட்டி நூல்கள் திங்கட்கிழமை (16) திருக்கோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத்தால் வழங்கப்பட்டது.

இந்நூல்களைத் திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்கத் தலைவரும் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான கதிரவேலு சண்முகம் குகதாசன் வழங்கி வைத்தார்.

இந்நிகழ்வில், திருகோணமலை மாவட்ட நலன்புரிச் சங்க செயலாளர் கணபதிப் பிள்ளை சிவானந்தன், செல்வநாயக புரம் இந்து மகா வித்தியாலய முதல்வர், ஆசிரியர், பெற்றோர் முதலியோர் கலந்து கொண்டனர்.









# பசையை பொலிஸாரின் மீது கொட்டிவிட்டு ஓட்டம்

பொலிஸ் அதிகாரிகள் சிலர் இரவு நேரச் சுற்றிவளைப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது ஜனாதிபதி வேட்பாளர் ஒருவருக்குச் சார்பாகச் சட்டவிரோதமாகச் சுவரொட்டிகளை ஒட்டிக்கொண்டிருந்த ஆதரவாளர்கள் இருவரைக் கைது செய்ய முயன்றுள்ளனர்.

இதன்போது, இந்த ஆதரவாளர்கள் இருவரும் தங்களிடம் இருந்த பசையை பொலிஸ் அதிகாரிகள் மீது கொட்டிவிட்டு அங்கிருந்து தப்பிச் செல்ல முயன்ற போது பொலிஸ் அதிகாரிகள் அனைவரும் அவர்களைத் துரத்திச் சென்று பிடித்துள்ளனர்.

# “தமிழர்கள் முட்டாள்களில்லை”

இலங்கை பொருளாதார ரீதியில் திவாலானமைக்கு தமிழ் மக்கள் மீதான யுத்த செலவீனமும் இனவாதத்தினால் தமிழ் மக்களை நாட்டின் அபிவிருத்தியில் பயன்படுத்தத் தவறியமையுமே காரணம் என்ற உண்மையை ஏற்று சிந்திக்காத செயல்படாத பேரினவாதத் தலைவர்களை நோக்கி நாம் இனியும் வாக்களிக்க முடியாது என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபையின் முன்னாள் தவிசாளரும் ரெலோவின் தலைமைக் குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

அச்சுவேலி, முரசொலி முன்றிலில் இடம்பெற்ற தமிழ் பொது வேட்பாளரை முன்னிறுத்திய பிரசாரக் கூட்டத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறியதாவது, தமிழ் மக்களின் வாக்குகள் தமக்குத் தேவை என வெற்றிவாய்ப்புக்காக



போட்டியிடுகின்ற வேட்பாளர்கள் முண்டியடிக்கின்றனர். அவர்கள் தமிழ் மக்களிடத்தில் வாக்குகளைக் கேட்கும் போது, கடந்த காலத்தில் தமது அரசியல் நீரோட்டத்தில் எந்தளவு தூரம் இனவாத அணுகுமுறைக்குள் இருந்தனர் என்பதைச் சிந்தித்து நாட்டின் தலைவராவதற்கு அந்தஸ்தற்றவர்கள் என்பதைப் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்று வெற்றி வாய்ப்புள்ளவராகக் கருதப்படும் வேட்பாளர்கள் இலங்கை பொருளாதார ரீதியில் நாடு திவாலான நிலைக்குச் சென்ற போது, சிங்கள மக்களிடத்தில் வெளிப்படையாகவே இந்த மோசமான நிலைமை அத்தனைக்கும் சொந்த தாய் நாட்டில் ஒரு தேசிய இனமான தமிழ் மக்கள் மீது அரச இயந்திரத்தினால் மேற்கொள்ளப்பட்ட கொடிய யுத்த செலவினம் காரணம் என்பதை நாட்டிற்குத் தெளிவு படுத்தவில்லை. சர்வதேசத்திடம் கடன் வாங்கச் சென்ற அரசு தமிழ் மக்கள் உலக அளவில் புலம்பெயர்வினால் பொருளாதார ரீதியில் முன்னிலையில் உள்ளனர் என்ற அடிப்படையில் அவர்களது முதலீடுகளையும் பங்களிப்பினையும் நாட்டிற்குள் கொண்டு வருவதற்கான உண்மையான முயற்சிகளை எடுக்கவில்லை. தமிழ் மக்கள் அங்கீகரிக்கத்தக்க அரசியல் தீர்வும் தமிழ் மக்களுக்குப் போர் மற்றும் போருக்குப் பின் முன்னான சூழ்நிலைகளில் இழைக்கப்பட்ட அநீதிகளுக்குப் பொறுப்புக் கூறல் இடம்பெற்று இருக்குமாயின் நாங்கள் ஒட்டுமொத்த இலங்கையராக முன்னேறியிருப்போம்.

இவற்றுக்கு இந்த பேரினவாத பௌத்த சிங்கள மேலாதிக்கத்தில் இருக்கக் கூடிய சிங்கள வேட்பாளர்கள் தயாரில்லை. அந்நிலையில் நாம் அவர்களுக்கு வாக்களிக்க மாட்டோம். எமது பிரச்சினைகளை முன்னிறுத்தும் தமிழ் வேட்பாளருக்கே வாக்களிப்போம் என்பதில் உறுதியாக இருப்போம் என முன்னாள் வலிகாமம் கிழக்குப் பிரதேச சபைத்தவிசாளரும் ரெலோவின் தலைமைக் குழு உறுப்பினருமான தியாகராஜா நிரோஸ் தெரிவித்தார்.

## அனுமதிப்பத்திரமின்றி காரை செலுத்திய தேரர் கைது

சாரதி அனுமதிப்பத்திரமின்றி காரை செலுத்திய மீரிகமவில் உள்ள விகாரையில் வசிக்கும் தேரர் ஒருவர் கைது செய்யப்பட்டதாக குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

குளியாபிட்டிய நகரிலிருந்து விகாரைக்கு பயணித்துக்கொண்டிருந்த 46 வயதுடைய தேரர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்கு கிடைக்கபெற்ற தகவலுக்கமையவே குறித்த தேரர் பயணித்த கரை சோதனையிட்டுள்ளதுடன் சரியான சாரதி அனுமதிப்பத்திரம் இல்லாத காரணத்தினால் சந்தேகத்தின் பேரில் அந்த தேரர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட தேரரை நீதிமன்றத்தில் முன்னிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் இச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாகவும் குருநாகல் பொலிஸார் தெரிவித்தனர்.

## எழுதியவர் சிக்கினார்

அத்துருகிரியவில் பச்சை குத்தும் நிலையமொன்றின் திறப்பு விழாவுக்கு வந்த கிளப் வசந்த என அழைக்கப்படும் வர்த்தகர் சுரேந்திர வசந்த பெரேரா உள்ளிட்ட இருவரைச் சுட்டுக் கொன்று நால்வரைக் காயப்படுத்திய சம்பவம் தொடர்பில் மற்றுமொரு சந்தேக நபர் கைது செய்யப்பட்டதாகத் தெரியவந்துள்ளது .

வர்த்தக நிலையமொன்றில் உதவியாளராகப் பணியாற்றி வந்த அளுத்கம தர்கா நகர்ப் பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த நபர் துப்பாக்கிச் சூட்டுக்குப் பயன்படுத்தப்பட்ட தோட்டாக்களில் கே.பி.ஐ. (KPI) என எழுதியுள்ளார் எனவும் சந்தேகநபர்களை அத்துருகிரிய, கல்பொத்த வீதி பகுதிக்கு காரில் ஏற்றிச் சென்றுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

## “படுகுழிக்குள்தான் விழ வேண்டிவரும்”


■ எஸ்.கணேசன்

ஏற்றுமதி பொருளாதாரத்தை அடிப்படையாகக்கொண்ட பொருளாதார முறைமையே இலங்கையின் பொருளாதார ஸ்திரத்தன்மைக்கு வழிவகுக்கும் என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உபதலைவரும், பெருந்தோட்ட மனிதவள அபிவிருத்தி நிறுவனத்தின் தலைவருமான பாரத் அருள்சாமி தெரிவித்தார்.

சுயாதீன ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவின் வெற்றிக்காக கண்டி மாவட்டம் முழுவதும் இ.தொ.காவின் சார்பில் பாரத் அருள்சாமி தீவிர பரப்புரைகளில் ஈடுபட்டு வருகின்றார்.

கண்டியில் மக்கள் மத்தியில் உரையாற்றுகையில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

“வரி வருமானம் மற்றும் பணம் அச்சிடுதல் உள்ளிட்ட விடயங்களே இலங்கையில் வருமான வழிமுறைகளாக இருந்துவந்துள்ளன. நாட்டில் பொருளாதார நெருக்கடி ஏற்படுவதற்கு இதுகூட பிரதான காரணமாக அமைந்தது. எனினும், பணம் அச்சிடுவதை ஜனாதிபதி நிறுத்தியுள்ளார். அதுமட்டுமல்ல ஏற்றுமதி பொருளாதாரம்மூலம் பொருளாதாரத்தை மீட்பதற்குரிய திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தி வருகின்றார். இதுவே காலத்தின் கட்டாய தேவையாக உள்ளது. அதேபோல நடைமுறைக்குச் சாத்தியமான, நிறைவேற்றக்கூடிய விடயங்களையே



ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைத்துள்ளார்.

ஆனால் ஏனைய வேட்பாளர்கள் வாக்கு வேட்டையை மாத்திரம் இலக்கு வைத்துத் தேர்தல் விஞ்ஞாபனங்களில் உறுதிமொழிகளை வழங்கியுள்ளனர். அவர்கள் கூறியுள்ள விடயங்களை செய்யப்போனால் நாட்டில் மீண்டும் பொருளாதார ஸ்திரமற்ற நிலைமை ஏற்படும். வரிசை யுகம் ஏற்படும். அதைத் தருவோம், இதைத்தருவோம் எனக் கூறுபவர்கள், எப்படி தருவோம் எனக் கூற மறுக்கின்றனர். அதிலிருந்தே அவர்களின் மோசடி அரசியல் புரிகின்றது. எனவே, வாக்குகளுக்காகப் பொய் உறுதிமொழிகளை வழங்கும் வேட்பாளர்களை நம்பினால் நாடும், நாமும் படுகுழிக்குள்தான் விழ வேண்டிவரும் என்றார்.

## விளையாட்டு உபகரணங்கள் வழங்கி வைப்பு

■ வி.ரி.சகாதேவராஜா

ஸ்ரீலங்கா கிரிக்கெட் கவுன்சில் ஒரு தொகுதி விளையாட்டு உபகரணங்களை காரைதீவு விளையாட்டு கழகத்திற்கு வழங்கியுள்ளது.

விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் விளையாட்டு அமைச்சின் செயலாளர் கணபதிப்பிள்ளை மகேசன், கழகச் செயலாளர் எஸ்.கிருஷாந்தனிடம் வழங்கி வைத்தார்.

இதற்கு இணைப்பாளராக இருந்து செயல்பட்ட விளையாட்டு கழக ஆலோசகரும் உதவிக் கல்விப் பணிப்பாளருமான வி.ரி.சகாதேவராஜா மற்றும் விளையாட்டு உத்தியோகத்தர் லோ.சுலக்ஷன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.



## ஒத்துழைப்பு வழங்க ‘பெப்ரல்’ தயார்

■ எம்.யூ.எம்.சனூன்



சுமார் 25 வருடங்களாக இலங்கையில் நீதியானதும் சுதந்திரமானதுமான தேர்தலை நடத்தும் வகையில், தொடர்ச்சியாகத் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபட்டு வரும் ‘பெப்ரல்’ அமைப்பு இம்முறையும் ஜனாதிபதித் தேர்தலை மிகச் சிறப்பாக நடத்துவதற்கு ஒத்துழைக்கும் வகையில், நாடு பூராகவும் உள்ள 25 மாவட்டங்களிலும் கண்காணிப்பு நடவடிக்கைகளுக்காக மிகச்சிறப்பான ஏற்பாடுகளைப் பூர்த்தி செய்துள்ளது.

அந்த வகையில், புத்தளம் மாவட்டத்தில் தேர்தல் பணிகளைக் கண்காணிக்கும் வகையில் ‘பெப்ரல்’ அமைப்பினூடாக பணியில் ஈடுபடுகின்ற கண்காணிப்பாளர்களுக்கான மற்றுமொரு செயலமர்வு திங்கட்கிழமை (16) சிலாபம் கிறிஸ்தவ சேவை மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

இச்செயலமர்வில் வளவாளர்களாக சட்டத்தரணி தினேஷ் பெரேராவும், கள இணைப்பாளராக கடமையாற்றுகின்ற தரிந்து பியுமாலும் கலந்துகொண்டதோடு, மாவட்ட ‘பெப்ரல்’ இணைப்பதிகாரி எம்.சி.எம்.ருமைஷும் கலந்துகொண்டு புத்தளம் மாவட்டத்தில் ஐந்து தேர்தல் தொகுதிகளிலும் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடவிருக்கின்ற இருபது கண்காணிப்பாளர்களுக்கான பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் வழங்கினார்கள்.

இச்செயலமர்வில் பிரதான வளவாளராக கலந்துகொண்ட தினேஷ், பெப்ரல் அமைப்பு கடந்த 25 ஆண்டுகளாகத் தேர்தல் கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுவதினூடாக இலங்கையில் ஜனநாயகத்தை, நீதியை, நிலைநாட்டுவதற்காக மேற்கொண்டு வருகின்ற பணிகளை விரிவாக விளக்கியதோடு, இப்பணியை மேற்கொள்வதற்காக ஆரம்ப காலத்திலேயே முழு மூச்சாக ஈடுபட்ட சர்வோதய அமைப்பு, செடக் நிறுவனம் ஆகிய இரு பிரதான தேசிய அமைப்புக்களின் பணிகள் குறித்தும் சிலாகித்து பேசியதோடு, தேர்தல் பணியில் ஈடுபடக்கூடிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் அப்பணியை வெற்றிகரமாகச் செய்யும் வகையில் ஆற்ற வேண்டிய கடமைகள், பொறுப்புக்கள் குறித்த விரிவான விளக்கங்களையும், தொழில்நுட்ப ரீதியான பயிற்சிகளையும் வழிகாட்டல்களையும் அவர் வழங்கினார்.

TEGOSL

ශ්‍රී ලංකා පුවත්පත් ආයතනය
இலங்கை பத்திரிகை ஸ்தாபனம்
Sri Lanka Press Institute

25th anniversary

மிகச் சிறந்த ஊடகவியல் விருதுகள் 2023

தேசிய பத்திரிகையொன்றில் கடந்த 2023ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதிக்கும் டிசம்பர் 31ஆம் திகதிக்குமிடையில் தமது ஆக்கங்கள், கேலிச் சித்திரங்கள் மற்றும் புகைப்படங்கள் பிரசுரமான விண்ணப்பதாரிகளுக்கு ஒவ்வொரு பிரிவுக்கும் தலா 5 என்ற அடிப்படையில் பத்திரிகையிலிருந்து வெட்டப்பட்ட தமது ஆக்கங்கள், கேலிச்சித்திரங்கள் மற்றும் புகைப்படங்களின் பகுதிகளை சமர்ப்பிக்க அழைப்பு விடுக்கப்படுகிறது.

பத்திரிகையிலிருந்து பெறப்பட்ட அசல் விடயதானங்களைப் பெறுவது சாத்தியமற்றிருப்பின் பத்திரிகை ஆசிரியர் அல்லது பத்திரிகை ஆசிரியர் சங்க உறுப்பினர் ஒருவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட பிரதியொன்றை அனுப்பக் கோரப்படுகிறது.

சுயாதீன நடுவர்கள் குழுவொன்று வெற்றியாளர்களை தெரிவு செய்யவுள்ளது.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பிப்பதற்கான பிரிவுகளுக்காக அல்லது விண்ணப்பப்படிவத்துக்கு இதனுடன் இணைக்கப்பட்ட கியூ.ஆர். குறியீட்டை ஊடுருவல் செய்யவும். மேலதிக தகவல்களுக்கு www.slpi.lk அல்லது www.pccsl.lk க்கு பிரவேசிக்க வேண்டும்.

**விடயதானங்களைச் சமர்ப்பிப்பதற்கான முடிவுத் திகதி செப்டெம்பர் 30, 2024 ஆகும்.**

அனைத்து விடயதானங்களும் சரியான முறையில் கோப்பாக்கம் செய்யப்பட்டு (தளர்வான கடதாசிகள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது) அவைத் தலைவர், அதிசிறந்த ஊடகவியல் விருதுகள் 2023, மேற்பார்த்து இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், 96, பெர்னார்ட் சொய்ஸா மாவத்தை (கிருள்ள வீதி), கொழும்பு 5 என்ற முகவரியில் கையளிக்கப்பட வேண்டும்.

# அவதூறுகளால் குப்பைக் கிடங்காக மாற்றியுள்ள இணையம்

ஜனாதிபதித் தேர்தலுக்கான பிரசாரம் புதன்கிழமை (18ஆம் திகதி) நள்ளிரவு 12 மணியுடன் நிறைவடையவுள்ளது. ஜனாதிபதித் தேர்தல் வாக்களிப்பு செப்டம்பர் 21ஆம் திகதி காலை 7 மணிமுதல் மாலை 4 மணி வரையில் இடம்பெறும். அதன்பின்னர், வாக்கெண்ணும் நிலையங்களுக்கு வாக்குப் பெட்டிகள் கொண்டு செல்லப்பட்டு, வாக்கெண்ணும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்.

ஜனாதிபதித் தேர்தல் பிரசாரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள காலப்பகுதியில், அந்த விதிகளை மீற முயற்சிக்கும் எவரையும், அந்த விதிகளைக் கழுத்தைப் பிடிப்பவர்களையும் கைது செய்ய பொலிஸாருக்கு அதிகாரம் உள்ளது. 25 ஆண்டுகளுக்கு முன்பு, இடைக்கால பிரசாரத் தடையின் போது, அரசியல்வாதிகள் மற்றும் அவர்களது கையாளுபவர்களுக்கு விதிகளை மீறுவதற்கான வாய்ப்புகள் குறைவாகவே இருந்தன.

அரசியல்வாதிகளின் புகைப்படம், விருப்பு எண்ணை விளம்பரம் செய்து பெரிய பதாகைகளை வைத்து வாகனங்களில் வீதி வீதியாகப் பயணிப்பது, சிறிய, சிறிய சந்திப்புகளை நடத்தி அரசியல்வாதிகளுக்கு வாக்கு சேகரிப்பது, அரசியல் பிரசாரத்தை முன்னெடுப்பது போன்றவற்றுக்குத்தான் அந்தக் கால வாக்குகள். அரசியல்வாதிகளின் விருப்ப இலக்கத்தைக் கொண்ட சுவரொட்டிகள் விதிகளை மீறுவதாக இருந்தது.

ஆனால், இன்றைக்கு இணையத்தின் பலத்தால் சமூக ஊடகங்கள் மூலம் தேர்தல் வேட்பாளர்களை விளம்பரப்படுத்துவது 24 மணி நேரமும் செய்யப்படலாம். இத்தகைய பிரசாரத்தில் அரசியல்வாதியைச் சட்டத்தால் தண்டிக்க முடியாது. இந்தப் பிரசாரங்கள் தனக்குத் தெரியாது என்றும் அவரைச் சிக்கலில் தள்ளத் தயாராக இருக்கும் ஒரு கும்பல் அவருக்குத் தெரியாமல் இணையம் மூலம் பிரசாரங்களை நடத்தியிருக்கலாம் என்றும் அவர் சொல்ல வேண்டும்.

சிலர், மற்ற நாடுகளில் இருந்து அரசியல் பிரசார திட்டங்களைத் தயாரித்து இணைய தளங்களில் வெளியிடுகின்றனர். பொலிஸாரோ, தேர்தல் ஆணையமோ இவர்களைப் பிடிக்க முடியாது. ஆனால், இவ்வாறான சமூக ஊடகங்களுக்கு எதிராகச் சட்டத்தை அமுல்படுத்த தேர்தல்கள் ஆணைக்குழு தீர்மானித்துள்ளதாகத் தேர்தல் ஆணையாளர் நாயகம் சமன் ஸ்ரீ ரத்நாயக்க தெரிவித்துள்ளார். ஆனால், இவ்வாறு செயற்படுவது பிரச்சினைக்குரியது என ஆணையாளர் நாயகம் ஒப்புக்கொண்டுள்ளார்.

இணையம் ஒரு கடல். அதில் கோடிக்கணக்கான மீன்கள் நீந்துகின்றன. அந்த பில்லியன்களில், ஒரே மாதிரியாக இருக்கும் பில்லியன் கணக்கான மீன்கள் உள்ளன. இதனால் கோடிக்கணக்கான மீன்களில் ஒன்று திருடப்பட்டாலும் பிடிக்க முடியாது. இணையம் மிகவும் சிக்கலான நிலையில் இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தல் நடைபெறுகிறது.

இந்த ஆண்டு ஜனாதிபதி தேர்தலுக்கு முந்தைய பிரச்சாரத்தின் குறிப்பிடத்தக்கப் பகுதி மிகவும் ஆபாசமாக இருந்தது. ஏறக்குறைய இவர்கள் அனைவரும் இந்த நாட்டில் வாழும் பிரபலமான இணையப் பயனர்கள்.

பொது, ஜனாதிபதித் தேர்தல் இரண்டுமே ஜனநாயகத்தை வலுப்படுத்தும். ஒரு நாட்டின் தலைவரைத் தேர்ந்தெடுக்க இரண்டு வழிகள் உள்ளன. அதில் முதன்மையானது வாள் தடிகளை எடுத்து மற்ற கட்சியினரைப் பயமுறுத்தி ஒரு தலைவரை அழைத்து வந்து அரியணையில் அமர்த்துவது.

இரண்டாவது வழி வாக்கெடுப்புக்குச் செல்வது. இத்தேர்தலை ஜனநாயக முறைப்படி நடத்த வேண்டும், வன்முறையில் ஈடுபட்டால், வாள், தடிகளின் பலத்தால் தலைவர் அரியணையில் அமரும் முதல் முறையாகதான் இருக்கும் என்பதை நினைவூட்டுகின்றோம்

தமிழ்Mirror க்கு www.tamilmirror.lk
எழுதுங்கள்


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk




# அடுத்த ஜனாதிபதி எதிர்நோக்கும் சவால்கள்



எம்.எஸ்.எம்.ஐயூப்

மூன்று நாட்களில், அதாவது எதிர்வரும் 21ஆம் திகதி இலங்கையின் 9ஆவது ஜனாதிபதித் தேர்தல் நடைபெற இருக்கிறது. ஆரம்பத்தில் 39 வேட்பாளர்கள் தேர்தல் களத்தில் இருந்த போதிலும், அவர்களில் ஒருவரான புத்தளத்தைச் சேர்ந்த டொக்டர் முஹம்மத் இல்யாஸ் இறந்ததையடுத்து, தற்போது 38 வேட்பாளர்கள் தான் மீதமாக இருக்கிறார்கள்.

அவர்களிலும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அனுரகுமார திசாநாயக்க, ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் நாமல் ராஜபக்ஷ ஆகிய நால்வரே ஊடகங்களால் பிரதான வேட்பாளர்களாகக் கருதப்படுகிறார்கள்.

இந்நால்வரும் ஏற்கனவே தத்தமது தேர்தல் விஞ்ஞாபனங்களை வெளியிட்டு இருக்கின்றனர். அவை உண்மையிலேயே அவர்கள் எவ்வாறு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்கப் போகிறார்கள் என்பதை விளக்கும் அறிக்கைகளல்ல. மாறாக அவை வெறும் வாக்குறுதி பட்டியல்களாகும்.

தேர்தல் விஞ்ஞாபனம் போன்ற விடயங்களுக்கு மக்கள் அவ்வளவு நேரத்தைச் செலவழிக்கத் தயாரில்லை. அதேவேளை, நாட்டின் சமூக பொருளாதார பிரச்சினைகளைத் தீர்க்கும் திட்டங்கள் அக்கட்சிகளிடம் இருந்தாலும், அவற்றை அறிக்கையாகத் தயாரித்தால் ஆயிரக்கணக்கான அல்லது நூற்றுக் கணக்கான பக்கங்களைக் கொண்டதாக அமையும். அவற்றைப் பொதுமக்கள் வாசிக்கப் போவதில்லை.

எனவே, தேர்தல் விஞ்ஞாபனங்களில் தற்போதைய பொருளாதார நெருக்கடிக்கு எவ்வாறு தீர்வு காண்பது என்பதோ அல்லது பொருளாதார அபிவிருத்தியை எவ்வாறு அடைவது என்பதோ இருக்கும் என்று எதிர்பார்க்க முடியாது. எனினும், பொருளாதார நெருக்கடியைத் தீர்ப்பதும் பொருளாதார அபிவிருத்தியை அடைவதும் சனிக்கிழமை (21) நடைபெறவிருக்கும் தேர்தலில் தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி எதிர்நோக்கும் பிரதான சவாலாகும். அதில் அவர் தோல்வியடைந்தால் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ எதிர்நோக்கிதைப் பார்க்கிலும், மோசமான நிலைமையை அவர் எதிர்நோக்கக் கூடும்.

உள்நாட்டு, வெளிநாட்டுக் கடன் பிரச்சினையே கோட்டாபய ராஜபக்ஷவின் காலத்தில் தோன்றிய பொருளாதார நெருக்கடிக்கான காரணமாகும். சுதந்திரமடைந்து ஒரு சில வருடங்களிலேயே இலங்கையின் கடன் தொகை வருடாந்தம் அதிகரிக்கத் தொடங்கியது. 1970ஆம் ஆண்டுகளின் இறுதியிலிருந்து பெற்ற கடனின் வட்டியைச் செலுத்துவதற்காக வட்டிக்கு மேலும் கடன் பெற வேண்டிய நிலைக்கு நாடு தள்ளப்பட்டது. அது இன்றும் தொடர்கிறது.

2022ஆம் ஆண்டளவில் நாட்டில் வெளிநாட்டுச் செலாவணி கையிருப்பு முற்றாகவே செலவழிந்து விட்டது. கோட்டாவின் சில பொருளாதார நடவடிக்கைகள் அதற்குக் காரணமாகின. குறிப்பாக இந்த நிலை ஏற்படுவதற்கான அறிகுறிகள், 2020ஆம் ஆண்டே காணப்பட்ட நிலையில் பொருளியல் நிபுணர்கள் மற்றும் எதிர்க்கட்சிகள் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடுமாறு விடுத்த கோரிக்கையைப் புறக்கணித்ததைச் சுட்டிக்காட்டலாம். இலங்கை எவ்வாறு கடன்களைத் திருப்பிச் செலுத்தும் என்ற கேள்வி எழுந்தமையால் இந்தியா தவிர்ந்த எந்தவொரு நாடும் இலங்கைக்கு உதவ முன்வரவில்லை.

இந்த நிலையில், நாட்டில் பாரிய எரிபொருள் தட்டுப்பாடு ஏற்பட்டது. கடனுக்கு எரிபொருட்களைக் கொள்வனவு செய்வதற்காக அமைச்சர்கள் மேற்கு ஆசிய (மத்திய கிழக்கு) நாடுகளை அணுகிய போதிலும் கொவிட் நோயால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களைப் பலாத்காரமாக எரித்ததன் விளைவாக, அந்நாடுகளும் கையை விரித்ததாக வெளிநாட்டு அமைச்சர் அலி சப்ரி ஒரு முறை பாராளுமன்றத்தில் கூறினார். நாடு வங்குரோத்து நிலையை அடைந்ததாக அரசாங்கமே அறிவித்தது.

எரிபொருள் தட்டுப்பாடு சகல துறைகளையும் பாதித்தது. உற்பத்தி மற்றும் போக்குவரத்துத் துறைகள் பாதிக்கப்பட்டதன் விளைவாகவும் நிலைமையை தமக்கு சாதகமாக்கிக்கொள்ள வர்த்தகர்கள் முயன்றதாலும் விலைவாசி மும்மடங்காக உயர்ந்தது. செலவு அதிகரித்ததன் காரணமாகவும் வருமானம் குறைந்ததன் காரணமாகவும் தனியார்த் துறையினர் தமது ஊழியர்களின் சம்பளத்தைக் குறைத்தனர். சுயதொழில்களில் ஈடுபட்டவர்களினதும் வருமானம் குறைந்தது. வருமானம் குறைந்து செலவு மும்மடங்காக உயர்ந்த நிலையை நாட்டில் பெரும்பாலானவர்கள் எதிர்நோக்கினர்.

இந்த நிலை அரசியல் நெருக்கடியாகவும் பரிணமித்து ஆர்ப்பாட்டங்கள் அதிகரிக்கவே ஜனாதிபதி கோட்டாபய செய்வதறியாது தடுமாறினார். இறுதியில் அவர் நிபுணர்களின் ஆலோசனைகளுக்குச் செவிமடுக்க நேரிட்டது. அவர் சர்வதேச நாணய நிதியத்தின் உதவியை நாடினார். அந்நடவடிக்கையை அது வரை தடுத்துக்கொண்டு இருந்த மத்திய வங்கி ஆளுநர் அஜித் நிவாட் கப்ரால் மற்றும் திறைசேரி செயலாளர் ஆகியோரை நீக்கி நாணய நிதியத்தோடு கலந்துரையாடக்கூடிய வகையில் அப்பதவிகளுக்கு நந்தலால் வீரசிங்கவையும் மஹிந்த சிறிவர்தனவையும் நியமித்தார்.

நாணய நிதியத்துடனான கலந்துரையாடல்களின் போது, இலங்கை அதிகாரிகளுக்கு நிதித்துறை மற்றும் சட்ட ஆலோசனைகளை வழங்க லஸார்ட் மற்றும் க்ளிபேர்ட் சான்ஸ் ஆகிய சர்வதேச நிறுவனங்களையும் நியமித்தார். அவ்வாறு இலங்கையின் பொருளாதாரம் நாணய நிதியத்தின் கட்டுப்பாட்டுக்குள் முற்றாகவே சென்றடைந்தது. நாணய நிதியம் கைவைத்த நிலையில், உலக வங்கியும் ஆசிய அபிவிருத்தி வங்கியும் இலங்கைக்கு உதவ முன்வந்தன.

அதன்படி, எரிபொருள் மற்றும் எரிவாயு இறக்குமதி செய்யப்பட்டன. போக்குவரத்து சீரடைந்தது. 'கியூ' வரிசைகள் மறைந்தன. ஆனால், ஏறிய விலைவாசி இறங்கவில்லை. பொதுமக்களின் குறைந்த வருமானம் அதிகரிக்கவில்லை. வரிசை இல்லாததால் கண்ணுக்குத் தென்படாத வகையில், பொருளாதார நெருக்கடி மக்களுடனேயே நாட்டில் தங்கி விட்டது. இது தான் இன்றைய நிலையாகும். இது கோட்டா தொடர்ந்தும் பதவியிலிருந்தாலும் கோட்டாவுக்குப் பதிலாக மற்றொருவர் பதவிக்கு வந்து இருந்தாலும் ஏற்படக்கூடிய நிலைமையாகும்.

இப்போது நாணய நிதியத்தின் கட்டுப்பாட்டிலிருந்து விலகினால் அந்நிதியத்தினதும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களினதும் உதவிகள் நின்று விடும். நாடு மீண்டும் பயங்கர அரசியல் நெருக்கடி நிலையை எதிர்நோக்கும். எனவே, சனிக்கிழமை (21) தெரிவு செய்யப்படும் ஜனாதிபதி நாணய நிதியத்தின் ஊழியராகவே 2027ஆம் ஆண்டு வரை இருப்பார்.

நாணய நிதியம் தற்போதைய நெருக்கடியைச் சமாளிக்க மட்டுமே உதவும். எனவே, அதன் பொறுப்பு 2027ஆம் ஆண்டு முடிவடைகிறது. அதற்குள்ளும் அதற்குப் பின்னரும் நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்து நாட்டின் கடன் சுமையைக் குறைக்கவும் புதிய கடன்களைக் குறைக்கவும் இலங்கை அரசாங்கம் தான் நடவடிக்கை எடுக்க வேண்டும். அதனைச் செய்யாது 2027ஆம் ஆண்டு வரை கைகளைக் கட்டிக்கொண்டு இருந்தால் அதன் பின்னர் அந்த இரண்டு பொறுப்புக்களையும் நிறைவேற்ற முடியாமல் மீண்டும் 2022ஆம் ஆண்டு ஏற்பட்டதைப் போன்றதோர் நிலைமை ஏற்படும்.

இது அரசியல்வாதிகளுக்குத் தெரியாத விடயமல்ல. இலங்கையின் பிரச்சினை அடிப்படையில் வெளிநாட்டுச் செலாவணிப் பிரச்சினையாகும். எனவே, தான் அரசியல்வாதிகள் ஏற்றுமதிப் போரளாதாரத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று கூறிக்கொண்டு இருக்கிறார்கள். அதனை எவரும் நிராகரிக்கப் போவதில்லை.

எனினும், இதனை நாம் பாடசாலைப் புத்தகங்களிலும் காண்கிறோம். இந்த சித்தாந்தம் நடைமுறையில் கருத்திட்டங்கள் வடிவமாக முன்வைக்கப்பட்டு அதற்கு செயலுருவம் கொடுக்க வேண்டும். ஆனால், பாரிய திட்டங்களில் கை வைத்து ஓரிரு வருடங்களில் வரும் அடுத்த தேர்தலில் தாம் தோல்வியடைந்தால் மற்றொருவர் அதனால் பயனடைவார் என்பதால் இது வரை அரசியல்வாதிகள் ஏதோ செய்து விட்டு காலத்தைக் கடத்துவதையே செய்தார்கள். செய்கிறார்கள்.

ஏற்றுமதிப் பொருளாதாரத்தைக் கட்டி எழுப்புதற்கான சட்டங்கள், அறிக்கைகள், திட்டங்கள் மற்றும் விதிமுறைகளை தமது அரசாங்கம் தயாரித்து வருவதாக 2022ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் தமது முதலாவது கொள்கை அறிக்கை முன்வைத்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க கூறினார். அதாவது, சுதந்திரமடைந்து 76 ஆண்டுகள் கடந்தும் அந்த சட்ட திட்டங்கள் தயாரிக்கப்பட்டு இருக்கவில்லை என்பதையே அவர் சுட்டிக் காட்டுகிறார். அந்த அறிக்கைகள் இப்போதாவது தயாரிக்கப்பட்டு விட்டதா? என்பதும் தெளிவில்லாததாகவே இருக்கிறது.

தற்போது ஜனாதிபதி வேட்பாளர்கள் முன்வைத்து இருக்கும் எந்தவொரு தேர்தல் விஞ்ஞாபனத்திலும். அவ்வாறான குறிப்பிட்ட கருததிட்டங்கள் இல்லை. செலவுகளுக்கான குறிப்பிட்ட திட்டங்கள் மட்டுமே அவற்றில் உள்ளன. எனினும், சில தலைவர்கள் இந்த விடயத்தை தமது கட்சிக்குள் ஆழமாக ஆராய்ந்து இருக்கிறார்கள் என்பது அவர்களது தொலைக்காட்சி உரையாடல்கள் மூலம் தெரிகிறது.

தேர்தல் விஞ்ஞாபனத்தில் இல்லாவிட்டாலும், அடுத்த ஜனாதிபதியிடம் அவ்வாறான திட்டங்கள் இல்லாவிட்டால் நிச்சயமாக இதன் விளைவை தமது பதவிக்காலத்தில் சந்திக்கப் போகிறார். அதனால் மக்களும் கஷ்டப்படப் போகிறார்கள். அவ்வாறான திட்டங்கள் இருந்தாலும், ஊழலைக் கட்டுப்படுத்த முடியாவிட்டால் அவை நிச்சயமாகத் தோல்வியிலேயே முடிவடையும். வாக்களிக்கும் போது, மக்களும் இந்த விடயங்களைக் கருத்தில்கொள்ள வேண்டும்.

இனப் பிரச்சினையைப் பொறுத்தவரையில், அடுத்த ஜனாதிபதியாவது அதனைத் தீர்ப்பாரா? என்பது சந்தேகமாகவே இருக்கிறது. ஏனெனில், இந்த விடயத்தில் தமிழ் தலைவர்களும் அரச தலைவர்களும் அவசியம் ஏற்படும் பட்சித்தில், விட்டுக் கொடுக்க தயாராக இருக்க வேண்டும். அந்த விட்டுக்கொடுப்பு அவர்களை அவர்களது சமூகங்களுக்குள் தனிமைப்படுத்தி விடும் அபாயம் இருக்கிறது. இது அடுத்த ஜனாதிபதி எதிர்நோக்கும் மிகப் பாரதுாரமான சவாலாகும்.



## வாழ்வியல் தரிசனம்

ஞானத்தைத் தேடுபவர்களில் பலர் ஆசைகளைப் பெருக்கியபடியேதான் இருக்கின்றார்கள். ஞானம் என்பது கடைச்சரக்கு அல்ல; அறிவுக்கும் மேலான மெய் அறிவு.

சாதாரணமான விடயமாக ஆன்ம ஞானத்தை நினைத்தலாகாது. பூரணத்துவமானவர்கள் மௌனமானவர்களாக இருக்கிறார்கள்.

ஆனால், அதிகம் பேசி மக்களைக் குழப்பும் 'சுவாமி'கள் என்று தங்களைத் தாங்களே முத்திரை குத்திக் கொள்பவர்கள் அதிகமாகி விட்டார்கள். எதையும் எதிர்பாராத, சுயநலன் எதுவும் அற்ற, ஆசைகளோடு இணையாத, தூயநெஞ்சு உடைய மனிதனே, ஆன்மிகம் பற்றிப் பேசுவதற்கு உரிமை உள்ளவன் ஆவான்.

செல்வம், புகழ், அதிகாரம் உள்ளவர்கள் பின்னால் செல்பவர்களால், ஆன்ம அறிவு பெறுவது எப்படி?

சகல கல்வியறிவையும் மக்கள் தேடிப் பெற வேண்டும். கல்வி ஒருவருக்கு அவசியமானது. பெற்ற கல்வியைப் புனிதமாகக் கொண்டு இயங்க வேண்டும். எளியோருக்கு இரங்குதல், வசதியற்றவர்களுக்கு இலவச கல்வியூட்டல், பொதுநல சேவை எல்லாமே தர்மத்துடன் இணைந்தவை. ஆன்ம எழுச்சியை உருவாக்குக!

நன்றி – பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

# மக்கள் விசனம்




ஹட்டன் நகரில் உள்ள மணிக்கூட்டுக் கோபுரம் தற்போது அறிவிப்புப் பலகையாக மாற்றப்பட்டுள்ளமை தொடர்பில் பிரதேச மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த மணிக்கூட்டு நீண்ட நாட்களாகச் செயல்படாமல் இருந்ததால் தற்போது மணிக்கூண்டு அறிவிப்புப் பலகையாக மாறியிருப்பது ஊருக்கு அவமரியாதை என கூறுகின்றனர்.

ஹட்டன்- டிக்கோயா மாநகர சபை அதற்கான மின்சாரக் கட்டணத்தை செலுத்தாதமையால் இந்த மணிக்கூட்டு நீண்ட நாட்களாக செயல்படாமல் நிறுத்தப்பட்டுள்ளதுடன், இது தொடர்பாக மாநகர சபை அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் இதனால் மணிக்கூண்டு தற்போது அறிவிப்புப் பலகையாக மாறியிருப்பதாகவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

- செம்பகம்






76 வருட கால வரலாற்றில்

# நிர்ணயமான ஒரு கட்டம்

சயனிகா ஸ்ரீகாந்த்,
ஊடகத்துறை மாணவி,
யாழ். பல்கலைக்கழகம்.

2024 இலங்கை ஜனாதிபதித் தேர்தலை நிர்வகிக்கும் சட்டக் கட்டமைப்பானது நாட்டின் அரசியலமைப்பிலும் ஜனாதிபதித் தேர்தல் சட்டத்திலும் வேரூன்றியுள்ளது.
அந்த வகையில், தேர்தலுக்கான தகுதி என்பது ஒரு நபருக்கு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதும் குறிப்பிடத்தக்க ஒரு விடயமாகும். ஒரு வேட்பாளர் இலங்கை குடிமகனாக இருக்க வேண்டும், அவர்கள் வேறு எந்த நாட்டிலும் இரட்டைக் குடியுரிமை வைத்திருக்கக் கூடாது, போன்ற தகுதிகளினை கொண்டிருக்க வேண்டும் என்பதுடன், வாக்களிக்க உரித்துடையவர்கள் இலங்கை பிரஜையாக 18 வயதினை தாண்டிய வராக இருக்க வேண்டியது அவசியமாகும். இவ்விரண்டு விடயங்களும் ஒரு வேட்பாளரும் வாக்களிப்பவரும் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதனை எடுத்துக்காட்டுவதாகும்.

2024ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலானது, மிகுந்த சவால் மிக்க தேர்தலாகவும் விருப்பு வாக்கின் மூலம் ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலாகவும் அமைய அதிக வாய்ப்புகள் உள்ளன. எனவே, அனைவரும் விருப்பு வாக்குகளை வெவ்வேறுபட்ட மூன்று பேருக்கு அளிக்க முடியும்.

> **ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகப் பதிவு செய்யும் அனைத்து பெரும் போக்கு ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கருத்துக்களைப் பதிவு செய்யும் அரசியல் விமர்சகர்கள் அனைவரும் பொதுவாகப் பயன்படுத்தும் ஒரு சொல் 'தீரணாத்மக' என்பது இது தமிழில் அதனை 'இரண்டில் ஒன்று முடிவாகப் போகும் தருணம்' என்று சொல்லலாம்.**

தேர்தலில் அளிக்கப்படுகின்ற வாக்குகளில் நிராகரிக்கப்பட்ட வாக்குகள் தவிர்த்து செல்லுபடியான வாக்குகளில் ஒரு வேட்பாளர் வெற்றி பெற வேண்டுமென்றால், 50% மான வாக்குகளைப் பெற வேண்டும்.

ஒருவேளை, எந்த ஒரு வேட்பாளரும் 50 வீதமான வாக்குகளை பெற்றிருக்காவிடில், என்ன நடக்கும் என்பதே இன்று பலரின் கேள்வியாக இருக்கின்றது. இந்நிலையில், தேர்தல் ஆணைக்குழு இரண்டாவது வாக்கு எண்ணும் முறைக்குச் செல்லும். அதாவது, எவரும் 50 வீதமான வாக்கு பெறாத நிலையில், முதலாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்றவரையும் இரண்டாவது அதிகூடிய வாக்குகளைப் பெற்றவரையும் தேர்ந்தெடுப்பார்கள். ஏனைய ஜனாதிபதி வேட்பாளர்களின் வாக்குச் சீட்டுகளில் அளித்திருக்கும் விருப்பு வாக்குகளின் எண்ணிக்கையை இரண்டு கட்சிக்கும் வழங்குவார்கள். அதன்பின்னர் முன்பிருந்த வாக்குகளின் எண்ணிக்கையும் மற்றும் குறித்த கட்சிக்குக் கிடைத்த விருப்பு வாக்குகளின் அடிப்படையிலும் ஜனாதிபதி தேர்ந்தெடுத்து அறிவிக்கப்படுவார்.

அந்த வகையில், 1981ஆம் ஆண்டின் 15ஆம் இலக்க ஜனாதிபதித் தேர்தல் சட்டத்தின் சட்ட ஏற்பாடுகளுக்கு அமைய ஜனாதிபதியைத் தேர்ந்தெடுப்பதற்கான பிரகடனத்தை வெளியிடும் திகதி, பெயர் குறித்த நியமங்களை ஏற்கும் திகதி என்பவற்றை ஜூலை மாதம் 26ஆம் திகதி தேர்தல் ஆணைக்குழு தெரிவித்து இருந்தது.

இதன் அடிப்படையில், இலங்கையின் ஒன்பதாவது நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியைத் தெரிவு செய்யும் தேர்தலுக்கான வாக்களிப்பு எதிர்வரும் 21.9.2024 அன்று இடம்பெறவுள்ளது.

அந்த வகையில், ஜனாதிபதி தேர்தலுக்கான கட்டுப்பணம் செலுத்தும் காலம் 14.8. 2024 அன்று நிறைவடைந்திருக்கும் தறுவாயில், தேர்தலுக்குப் போட்டியிடுவதற்காக 40 பேர் கட்டுப்பணத்தினை (அரசியல் கட்சி 50,000.00, சுயேச்சை 75,000.00) செலுத்தியிருந்தனர் .

அத்துடன், வேட்புமனுத்தாக்குதல் 15.8.2024 அன்று காலை இடம்பெற்றதுடன், இதில் கட்டுப்பணம் செலுத்திய 40 பேரில் 39 பேர் வேட்பு மனுவைத் தாக்கல் செய்தனர்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்ரமசிங்க, சஜித் பிரேமதாச, அனுரகுமார திஸ்ஸநாயக்க, நாமல் ராஜபக்ஷ, சரத் பொன்சேகா,



விஜயதாச ராஜபக்ஷ, அரியநேந்திரன் உள்ளிட்ட 38 பேர் போட்டியிட்டுள்ளனர்.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகப் பதிவு செய்யும் அனைத்து பெரும் போக்கு ஊடகங்களிலும், சமூக ஊடகங்களிலும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாகக் கருத்துக்களைப் பதிவு செய்யும் அரசியல் விமர்சகர்கள் அனைவரும் பொதுவாகப் பயன்படுத்தும் ஒரு சொல் 'தீரணாத்மக' என்பது இது தமிழில் அதனை 'இரண்டில் ஒன்று முடிவாகப் போகும் தருணம்' என்று சொல்லலாம்.

முன்னர் இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தல்களுடன் ஒப்பிட்டு நோக்கும் பொழுது இந்தத் தேர்தல் முற்றிலும் வேறுபட்ட ஓர் இயல்பைக் கொண்டு இருப்பதனை அவதானிக்க முடிகிறது. ஜனாதிபதித் தேர்தல்களில் இதுவரையில் இருந்து வந்த இருமுனைப் போட்டியில் இந்த தடவை ஒரு நான்குமுனை போட்டியாக மாற்றமடைந்திருப்பது முதல் விடயமாகும். தேர்தல்களில் இதுவரையில் ஐந்து வீதத்திற்குக் குறைவான வாக்குகளை மட்டுமே பெற்று வந்த ஒரு விளிம்பு நிலைக் கட்சி ஒரு முதன்மை போட்டியாளராக எழுச்சியடைந்திருப்பது இரண்டாவது சிறப்பு விடயமாகும். 1990 தொடக்கம் ஜனாதிபதித் தேர்தலில் எதிரெதிராக இனவாதமாகப் பார்க்கப்பட்ட தமிழ்-சிங்கள சமூகத்தினரின் பிரிவினைவாதம் தீவிரவாதம் இன்று பிரசார மேடைகளிலிருந்து தலைமறைவாகி இருக்கின்றது மற்றுமோர் முக்கிய விடயமாகும். அதாவது, கடந்த 20 ஆண்டுகளில் வெளிப்படையாக இனவாதம் பேசப்படாமல் நடத்தப்படும் முதலாவது தேர்தல் இதுவாகும்.

சிங்கள மக்கள் செறிந்து வாழும் பிரதேசத்தில் தெளிவாகவே ஒரு ஜே.வி.பி./ என்.பி.பி. ஆதரவு அலை நிலவி வருவதை அவதானிக்க முடிகிறது.

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பாக ஒவ்வொரு தரப்புகளால் பல்வேறு இடங்களில் நடத்தப்பட்ட கருத்துக்கணிப்புகள் மீண்டும் மீண்டும் இதனை உறுதி செய்கின்றனர்.


அனுரகுமார திசாநாயக்க தலைமையிலான அணி மீது கடுமையான விமர்சனங்களை முன்வைக்கும் அரசியல் ஆய்வாளர்களும் கூட, "ஆம் அவர்களுக்கு ஒரு ஆதரவு அலை இருந்து வருகிறது அதனை மறுக்க முடியாது" என்ற பீடிகையுடனே தமது கருத்துக்களை முன் வைக்கிறார்கள். அதே வேளையில், மக்கள் பிரச்சாரங்களின் வாக்குறுதிக்காகக் காத்திருக்கும் அதே நேரம், சஜித் மற்றும் ரணில் ஆகியோர் இந்த தடவை முன் வைத்திருக்கும் பிரசார ஸ்லோகங்கள் பெரிதாக வாக்காளர்களைக் கவர்வதாக இருக்கவில்லை.

> **"ஒரு தடவை அவர்களுக்கும் கொடுத்துப் பார்ப்போம்" என்பது அதாவது, "இவ்வளவு காலமும் எத்தனையோ பேருக்கு வாக்களித்து ஏமாந்திருக்கின்றோம், கடைசியில் இன்றைய வங்குரோத்து நிலை தான் எமக்கு எஞ்சி இருக்கின்றது" என்ற ஆதங்கமே இந்த பேச்சுக்களின் தொனிக்கின்றது. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட 76 வருட கால வரலாற்றில் மிக நிர்ணயமான ஒரு கட்டத்தில் வந்து நிற்கின்றது**

அந்த வகையில், தேர்தல் கருத்துக்கணிப்பின் அடிப்படையில், வாக்களிக்கும் மக்கள் பல்வேறு பிரிவிற்கு உட்படுத்தப்படுகின்றனர்.


1.வாக்குரிமை இருந்தும் வாக்களிக்க விரும்பாதவர்கள்.
2. அரசியல் தலைவர்கள் மேல் ஆர்வம் கொண்டவர்கள்.
3.தேர்தல் குறித்து ஆர்வம் இல்லாதவர்கள்.
4. சுயமாக முடிவுகளை எடுத்து தமது உரிமையை நிலை நாட்டுபவர்கள்.
5.உந்துதலின் பெயரில் செயல்படுபவர்கள்
6. தேர்தல் பிரசாரங்களுக்காக காத்திருப்பவர்கள்.

பொதுவில் மக்களது கருத்தானது, குறித்த அரசியல் கட்சிகள் தாம் வீழ்த்த விரும்பும் முதன்மை எதிரி யார் என்பது அவர்களுக்கே தெளிவில்லாமல் இருப்பதும், இலங்கையின் பொருளாதார யதார்த்தங்களுக்குத் துளியும் சம்பந்தமில்லாத வாதத்தில் கோமாளித்தனமான வாக்குறுதிகளை வழங்குவது என்பதையும் மக்கள் முன்வைக்கின்றனர். அது மட்டுமின்றி, "ஒரு தடவை அவர்களுக்கும் கொடுத்துப் பார்ப்போம்" என்பது அதாவது, "இவ்வளவு காலமும் எத்தனையோ பேருக்கு வாக்களித்து ஏமாந்திருக்கின்றோம், கடைசியில் இன்றைய வங்குரோத்து நிலை தான் எமக்கு எஞ்சி இருக்கின்றது" என்ற ஆதங்கமே இந்த பேச்சுக்களின் தொனிக்கின்றது. சுதந்திரத்திற்குப் பிற்பட்ட 76 வருடகால வரலாற்றில் மிக நிர்ணயமான ஒரு கட்டத்தில் வந்து நிற்கின்றது.



# பெரியாரின் பெருங்கனவு

**செப்.17 – தந்தை பெரியாரின் 145ஆவது பிறந்த நாள்**



சாதிகளால் ஆன இந்தியச் சமூகத்தை ஆழமாகப் புரிந்துகொள்வதுடன், அக்கற்பனைக் கோட்பாட்டை அழித்தொழிப்பதற்கான தேவையை உணர்ந்தவர்களால் மட்டும்தான் பெரியாரின் பொருத்தப்பாட்டையும் சாதியொழிந்த ஒரு சமூகத்தை உருவாக்க, அரை நூற்றாண்டுக் காலம் அவர் ஆற்றிய மகத்தான பங்களிப்பையும் உணர்ந்துகொள்ள முடியும். அவர் நாள்தோறும் எழுதியதும் உரையாடியதும் போராடியதும் சிந்தித்ததும் பிறவி இழிவை முற்றாக அழித்து, சுயமரியாதையுடன் கூடிய சமத்துவச் சமூகத்தை உருவாக்குவதற்காகவே என்பதை இந்த நாடும் சமூகமும் புரிந்துகொண்டிருந்தால், இந்நாட்டின் உயரிய விருது அவருக்கு நல்கப்பட்டிருக்கும்.

## முன்னுதாரணமற்ற தலைவர்:

முடியாட்சி முதல் குடியாட்சி வரை, அரசியல்தான் மக்களின் அனைத்துச் சிக்கல்களையும் தீர்க்கும் அருமருந்தாகக் கருதப்படுகிறது. அது உண்மையெனில், இந்தியாவில் ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேல் நிலவும் வர்ண - சாதி முரண்களை மட்டும் அது ஏன் தீர்க்கவில்லை என கேட்ட பெரியார், அதற்காகவே அரசியலை முற்றாகத் தவிர்த்த ஓர் ஒப்பற்ற இயக்கத்தைத் தோற்றுவித்தார்.

தம்முடைய இயக்கத்தைச் சேர்ந்தவர்கள் எவ்விதத் தேர்தல் அரசியலிலும் பங்கேற்கக் கூடாது என்பதை இயக்கத்தின் முதன்மைச் சட்டமாக்கி, தம் இயக்கம் இறுதிவரை ஒரு சமூகப் பண்பாட்டு இயக்கமாகவே செயல்படும் என்றார். வரலாற்றில் புத்தரைத் தவிர, உலகளவில்கூடப் பெரியாரின் இத்தகைய அரசியல் தவிர்த்த அணுகுமுறைக்கு முன்னுதாரணமாக எவரையும் குறிப்பிட்டுச் சொல்வது கடினம்.

"சுயமரியாதை இயக்கமானது, அரசியல்களின் பெயரால் நமது நாட்டில் உள்ள பல கட்சிகளைப் போல் அல்லாமல், அந்நியர்களிடமிருந்து யாதொரு விதமான சிறு விஷயத்தையும் எதிர்பாராமல் மக்களின் அறிவை விளக்கி - அவரவர்களின் மனப்பான்மையை மாற்றுவதன் மூலமே, உண்மையான விடுதலையையும் சமத்துவத்தையும் தன்மதிப்பையும் உண்டாக்கக்கூடியதான ஒரு இயக்கமாகும்" ('குடிஅரசு', 25.08.1929) என தன்னுடைய இயக்கத்தைப் பெரியார் வரையறுத்தார்.

அரசியல் உரிமைகளால் நிறைவடைந்தோர் அவ்வுரிமைகளை நடைமுறைப்படுத்துவதற்கான போராட்டங்களை முன்னெடுக்கின்றனர். அதற்குப் பல நிலைகளிலும் ஆதரவு கிடைக்கிறது. ஆனால், சமூக, மத, பண்பாட்டு உரிமைகள் முழுமை அடையும்போதுதான், அதன் மீது கட்டப்படும் அரசியல் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்பதை அவர்கள் இன்றுவரை உணர்ந்ததாகத் தெரியவில்லை. அரசியலில் சமத்துவமும் சமூக நிலையில் ஏற்றத்தாழ்வுகளும் நீடிப்பதையே இந்நாட்டின் முதன்மை முரணாகக் கண்டறிந்து, அதைக் களைவதற்கான போராட்டத்தையே பெரியார் இறுதிவரை நிகழ்த்தினார்.

தமக்குத் தேசாபிமானமோ, பாஷாபிமானமோ, குலாபிமானமோ இல்லை என்று அறிவித்த பெரியார், எந்தப் புலவரும் அறிஞரும் செய்யத் துணியாத தமிழ் மொழிச் சீர்திருத்தத்தைச் செய்தார். இன்றுவரை கற்பு, கைம்பெண், விபச்சாரி போன்ற சொற்கள் எல்லாம் பாலினச் சமமின்மையை வலியுறுத்தி, ஆணாதிக்கத்தை நிலைபெறச் செய்வதால், பக்தியின் ஆதிக்கம் நிறைந்திருக்கும் செம்மொழியைக் காட்டுமிராண்டி மொழி என விமர்சித்தார். அத்துடன் தமிழுக்கும் மதத்துக்குமான தொடர்பை நீக்கி அதை மதச்சார்பற்ற, பாலினச் சமத்துவத்துடனான அறிவியல் மொழியாக்க விழைந்தார் பெரியார்.

## உயர் எண்ணங்களின் சோலை:

தனித் தமிழ்நாடு கோரிக்கையாக இருந்தாலும், இந்தி / சம்ஸ்கிருத எதிர்ப்புப் போராட்டமாக இருந்தாலும் இடஒதுக்கீட்டைப் பாதுகாத்து, பரவலாக்க முன்னிறுத்திய செயல் திட்டமாக இருந்தாலும் கடவுள், மத எதிர்ப்பாக இருந்தாலும் அவை அனைத்தையுமே பெரும்பான்மை மக்களிடையிலான சாதிய முரண்களைப் பலவீனப்படுத்தவும் சமூகத்தை ஜனநாயகப் படுத்தவுமே பெரியார் பயன்படுத்தினார்.

ஏனெனில், தமிழர்/திராவிடர் ஓர்மை என்பது, ஓர் அரசியல் ஓர்மையாக இல்லாமல் அது ஒரு சமூக ஓர்மையாகப் பரிணமிக்க வேண்டும் என்பதே பெரியார் போராட்டங்களின் அடிநாதம். ஆனால், உயர் எண்ணங்களின் சோலையாக மலர்ந்த பெரியார் செயல்திட்டங்களின் அகவயமான கூறுகள் புறந்தள்ளப்பட்டு, புறவயமான அரசியல் முழக்கங்களே தற்போது முன்னிறுத்தப் படுகின்றன.

தலித் மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் நடைபெறும் போது, பெரியார் அம்மக்களுக்கு ஆதரவாக இல்லை என்றொரு விமர்சனம் தொடர்ச்சியாக முன்வைக்கப்படுகிறது. சாதி ஒழிப்பைத் தன் உயிர்மூச்சாகக் கொண்டு செயல்பட்ட ஒரு சிந்தனையாளர், அவ்வமைப்பால் கடுமையாகப் பாதிக்கப்படும் மக்களுக்கு எதிராக இருந்தார் என்று குற்றம்சாட்டுவது, ஆதாரமற்றது உள்நோக்கம் உடையது.

தலித் மக்களுக்கு எதிராக வன்கொடுமைகள் நடைபெறும் போது, அம்பேத்கரின் நிலைப்பாடு எத்தகையதாக இருந்ததோ அதே தன்மையில்தான் பெரியாரின் அணுகுமுறையும் அமைந்திருந்தது. வன்கொடுமைகளுக்கு எதிராக மட்டுமே செயல்படுவது என்பது, அதன் தோற்றுவாயான சாதியையும் அதற்கு உறுதுணையாக நிற்கும் மதத்தையும் எதிர்க்காமல், அதன் வெளிப்பாடான தீண்டாமையை மட்டுமே எதிர்க்கும் காந்திய அணுகுமுறையைப் போன்றது. அம்பேத்கரும் பெரியாரும் இத்தகைய அணுகுமுறைக்கு நேர் எதிரானவர்கள்.

## நவீனப் பார்வை:

நவீனக் கருத்தரிப்பு குறித்தெல்லாம் 80 ஆண்டுகளுக்கு முன்பே கணித்த பெரியார், 'இனிவரும் உலகம்' (1944) என்ற தமது நூலில், விமானப் போக்குவரத்து அதிகமாகும், கம்பியில்லா தந்திச் சாதனம் ஒவ்வொருவர் சட்டைப் பையிலும் இருக்கும், ரேடியோ ஒவ்வொருவர் தொப்பியிலும் அமைக்கப்பட்டிருக்கும், உருவத்தைத் தந்தியில் அனுப்பும்படியான சாதனம் எங்கும் மலிந்து, ஆளுக்காள் உருவம் காட்டிப் பேசிக்கொள்ளத்தக்க சௌகரியம் ஏற்படும். மேற்கண்ட சாதனங்களால் ஓரிடத்திலிருந்துகொண்டே பல இடங்களில் உள்ள மக்களுக்குக் கல்வி கற்றுக் கொடுக்கச் சாத்தியப்படும் என்றார்.

ஆனால், இதைப் பலரும் முன்கூட்டியே அவதானித்த பெரியாரின் நவீனத் தொழில்நுட்பச் சிந்தனை என்றளவில் மட்டுமே சிலாகிக்கின்றனர். உண்மையில் நவீனம் (Modernity) என்பதைப் பெரியார் வெறும் தொழில்நுட்பக் கண்டுபிடிப்புகளாக மட்டுமே பார்க்கவில்லை. தான் கணித்த உலகில், இழிவான வேலை இருக்காது, அடிமைத்தனம் இருக்காது, பெண்களுக்குக் காவல் கட்டுப்பாடு இருக்காது, போர் இருக்காது, அதிசயப் பொருள்களை மக்கள் எல்லோரும் ஒன்றுபோல் அனுபவிக்கும் வாய்ப்பு ஏற்படும், உலகில் எந்தத் தனிப்பட்ட மனிதனுக்கு ஏற்படும் சங்கடத்தையும் குறைபாடுகளையும் ஒவ்வொருவரும் (சமூகமே) தங்களுக்கு ஏற்பட்டதுபோல் நினைக்கும்படியும் அனுபவிப்பதுபோல் துடிக்கும்படியும் அவ்வளவு கூட்டு வாழ்க்கையும் ஒற்றுமை உணர்ச்சியும் ஏற்படும் என்றார் பெரியார். ஆக, சாதிகள் ஒழிந்த, சமத்துவம் நிறைந்த, நாட்டின் வளங்களை அனைவரும் பாகுபாடின்றி அனுபவிக்கக்கூடிய உன்னதமான ஜனநாயகப் பண்பாட்டைத்தான் (இனிவரும்) நவீன உலகமென்று பெரியார் கணித்தார்.

கடவுள், மதம், சமூகம், கலை, இலக்கியம், பண்பாடு, குடும்பம், தேசியம், மொழி, நாடு என எதுவாக இருந்தாலும் அது சாதியைப் பாதுகாப்பதாக இருக்கக் கூடாது; பாலின ஏற்றத்தாழ்வுகளைக் கொண்டதாக இருக்கக் கூடாது என்பதில் மிகவும் கண்டிப்பாக இருந்தார் பெரியார். தவிர, ஆரியர் - திராவிடர் முரணையும் அவர் ரத்தப் பரிசோதனை செய்து, இன்னொரு இனப் பாகுபாட்டுக்கு வித்திட்டவரல்ல. பெரும்பான்மை மக்களாக இருக்கும் இந்தியத் தொல்குடியினர் மீது நிகழ்த்தப்பட்ட மத, பண்பாட்டுப் படையெடுப்பை அறவழியிலும் அறிவுப் பிரச்சாரத்தின் மூலமும் நேர் செய்வதையே வாழ்க்கையின் முழு நேரத் தொண்டாகக் கொண்டிருந்தார்.

மனிதர்களிடையே ஏற்றத்தாழ்வுகளைக் கற்பிக்கும் மதத்தைக் கண்டிக்கும் பெரியார், உண்மையில் மதம் எப்படி இருக்க வேண்டும் என்பதையும் விவரிக்கத் தயங்கவில்லை, "என்னை மத விரோதி என்று சில மதவாதிகள் சொல்லுகிறார்கள். மதங்கள் ஒழிக்கப்பட வேண்டும் என்று நான் சொல்லுவதும் இப்படிப்பட்ட (ஏற்றத்தாழ்வுகளைக் கொண்ட) மதங்களைத்தானே ஒழிய, மனிதனிடம் மனிதன் அன்பாய், உபகாரியாய், சமுதாயத்துக்கு ஏற்ற ஒழுக்கமாய், நாணயமாய், பிறர் நலத்தில் பற்றுள்ள நண்பனாய், மற்றவர்களுக்குத் தொல்லை இல்லாதவனாய் நடந்துகொள்ளும் தன்மையை மதம் என்றால் அதைப் போற்றுகிறவனே ஆவேன். நானும் கூடுமானவரை அப்படிப்பட்ட மதவாதியே ஆவேன்" ('குடிஅரசு' - 15.02.1947).

'அனைத்துச் சாதியினரும் அர்ச்சகர் ஆகலாம்' என்று பெரியார் முன்வைத்த திட்டம் இன்று செயல்வடிவம் பெற்றுள்ளதால், அவர் நெஞ்சில் தைக்கப்பட்டிருந்த அந்த முள் அகற்றப்பட்டுவிட்டதாகப் பலரும் மன நிறைவுகொள்கின்றனர். உண்மையில், "பன்னூற்றாண்டுகளாகப் பிறப்பின் காரணமாகப் படிநிலையின் கீழ்நிலையில் உள்ள சூத்திரர்களும் பஞ்சமர்களும்கூட, கருவறைக்குள் நுழையலாம்" என்ற அளவில்தான் உரிமை கிடைத்துள்ளதே தவிர, அதனால் பிறவி இழிவு எள்ளளவும் நீங்கவில்லை.

"இருளை உணராதவர்கள் ஒருபோதும் ஒளியைத் தேடிக் கண்டடைய மாட்டார்கள்" என்றார் அம்பேத்கர். பிறப்பு உருவாக்கியுள்ள இவ்விருளை ஆழமாக உணர்ந்தவர்களால் மட்டும்தான், பெரியார் நெஞ்சில் தைத்த முள்ளை நிரந்தரமாக நீக்க முடியும். (நன்றி: தி இந்து)

# சமூக எண்ணங்களின் சிதறல்கள்



ச.தனுஷ்கா,
ஊடகத்துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.

கவிஞர் து.திலக் கவிதை, கட்டுரை, சிறுகதை போன்ற பல்வேறு படைப்புகளைப் படைத்த படைப்பாளியாகவும் சிறந்த சமூக சேவகனாகவும் உலக மாற்றத்தை வேண்டி நிற்கின்ற படைப்பாளியாகவும் காணப்படுகிறார். யதார்த்தமான கருத்துக்களைக் கொண்டு இலகுவான சொல்லாடல்களுடன் தொகுக்கப்பட்டுள்ள கவிதைத் துளிகள் ஒவ்வொன்றும் இவ்வினிய மலரில் ஆங்காங்கே சிதறிக்கிடக்கின்றன. நல்லதொரு எழுத்தாளனுக்குரிய சகல பண்புகளும் இத்தொகுப்பினை அமைதியாகப் படிக்கின்றபோது, இயல்பாகவே மனதில் உணர்ந்து கொள்ள முடிகின்றது.

ஓரினத்தின் அடையாளத்தை அவ்வினத்தின் தாய்மொழி தான் வெளிப்படுத்துகின்றது. "பரந்து விரிந்த பூமிப்பந்தில் எங்குதான் தமிழ் இல்லை" என்று சொல்லும் அளவிற்குத் தமிழினமும் தமிழ் மொழியும் வேரூன்றி மொழியைப் பெருமைப்படுத்துகின்ற போது, மொழியைக் காதல் செய்து மனித சிந்தனையைத் தூண்டி பேனா முனையால் அழகிய சொற்கோர்வைகளாக்கி அதனை ஒரு நூலாக உருவாக்கி ஆவணமாக்குவதற்கு உரும்பையூர் து.திலக் (கிரி) எனும் எழுத்தாளர் மேற்கொண்டுள்ள முயற்சியினையும் அதனைத் தான் பிறந்த மண்ணிலேயே பிரசவிக்க வைக்க வேண்டும் என்ற எண்ணத்தினையும் காணமுடிகின்றது.

தமிழ் கவிதையின் தரம் அதன் தகுதிப்பாடுகள் பற்றி காலம் காலமாக நம் சான்றோர்கள் காட்சிப்படுத்தி வந்துள்ளனர்."நமக்குத் தொழில் கவிதை" என்கிறான் பாரதி. அடுத்த வரியிலேயே" நாட்டுக்கு உழைத்தல்" என்று மெருகேற்றுகிறான். அந்தளவு கவிதை என்பது எப்போதும் சமூகக் குரலாகவே தமிழ் மரபில் பார்க்கப்பட்டு வந்துள்ளது. இத்தகைய தமிழ்க்கவிதைத் தடத்தில் ஜீவநதியின் வெளியீடாய் தனது 'சிதறல்கள் - 100' எனும் கவிதைப் படைப்போடு கவிஞர் கிரி என அழைக்கப்படுகின்ற திலக் கால்பதித்துள்ளார்.




இந்நூலின் அட்டைப்படத்தை உற்று நோக்கும் பொழுது, பல கருத்துக்களை இவ்வட்டைப்படமானது வாசகர்களுக்குப் புலப்படுத்துகிறது. இருளான பின்னணியில் ஒரு கால் உள்ளது. அந்த காலில் சங்கிலி பிணைக்கப்பட்டுள்ளது. அந்தச் சங்கிலியை உடைத்துக் கொண்டு, பறவைகள் வெளி வருகின்றன. இவ்வாறு பொருள் செழுமையாக அட்டைப் படத்தை வடிவமைத்துள்ளார் க.பரணீதரன். இதன் பொருள், எனது கருத்தின் அடிப்படையில் நான் விளங்கிக் கொண்டதாவது, காலம் காலமாக எம்மை கட்டுப்படுத்துகின்ற சாஸ்திர சம்பிரதாயங்கள், சமூக கட்டமைப்புகள், சமூகப் பிரச்சினைகள் போன்றவற்றை உடைத்து எறிந்து கொண்டு வெளி நோக்கி வருகின்றமையை உணர முடிகிறது.

நடந்து கொண்டிருந்த கால்களில், ஓர் காலில் வலிந்து வன்முறை என்னும் சங்கிலி பிணைக்கப்பட்டுள்ளது. இருளால் பயணமானது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இருளாலும் வலிமையான சங்கிலியாலும் பயணத்தை நிறுத்தி வைக்க முடிந்தது. ஆனால், ஒரு ஆன்மாவின் தரிசனத்தை அந்த வலிமையான சங்கிலியால் பிடித்து நிறுத்த முடியவில்லை. இருளை கிழித்துக்கொண்டு வெளிச்சத்தை நோக்கி ஆயிரம் ஆயிரம் பறவைகள் பறக்கின்றன. அவை சமாதான புறாக்களாக அல்லது இருளை உடைத்தெறிகின்ற ஒளிப் பிழம்புகளாக்க எவ்வாறாயினும் என்றோ ஒரு நாள் இருள் சூழ்ந்த பயணத்திற்கு ஒளி கிடைக்கும் என்ற நம்பிக்கையுடன் சிதறல்கள் நூறு என்னும் நூலைக் கவிஞர் திலக் படைத்துள்ளார். மேலும், சிதறல்கள் நூறு என்ற கவிதைகள் தொகுப்பிற்கு இந்த அட்டைப்படம் மிகவும் பொருத்தமானதாக உள்ளது.

நூலில் முதலாவது அங்கமாக பெற்றோரின் ஆசியுரை அமைகின்றது. இதனைத் தொடர்ந்து, 'கிரியின் கவிதைகள்' எனும் தலைப்பில், கவிஞர் கு.வீரா, 'ஏர் நிலத்தினால் எம் நிலம் தாங்கும் மகன்' எனும் தலைப்பில் யோ.புரட்சி, 'மண்ணின் மைந்தர்கள்' அமைப்பின் சர்வதேச ஆலோசகரான பசுபதி கந்தசாமி போன்றோர்களால் வாழ்த்துரைகள் எழுதப்பட்டுள்ளன.

நூலின் பின் அட்டைப்படத்தில் கவிஞரும் பாடலாசிரியருமான வன்னியூர்-வரனால் வழங்கப்பட்ட நூல் ஆசிரியர் அறிமுகம் காணப்படுகிறது. இந்நூலானது, 100 கவிதைகளைக் கொண்டமைந்துள்ளது.

எளிமையான மொழி நடையில், இலகுவாக அர்த்தங்களை பொருட்கோடல் செய்யத்தக்க வகையில், கவிஞர் கவி படைத்துள்ளார். வாளை விடப் பேனாவின் கூர்மை அதிகம் என்பார்கள். அந்த வகையில் து.திலக்கின் நூறு கவிதைகளில் என் மனதில் பதிந்த சில கவிதைகளை இங்கு பகிர்கின்றேன்.

படைப்பாளி முதலாவது கவியாகத் தமிழ் மொழியை அடிப்படையாகக் கொண்டு படைத்தாலும் தனது இரண்டாவது கவியாக "தாயுள்ளம்" என்ற கவிதையைப் படைத்துள்ளார். இங்கு படைப்பாளி முதன்மையாகத் தனது பெற்றோரை வணங்குகின்றார். அதன் பிற்பாடு சமூகத்தின் பல உண்மைகளை யதார்த்தங்களை மனித வாழ்க்கைக்குத் தேவையான பல விடயங்களைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

"வழிபாட்டுத் தலங்கள்" என்னும் கவிதையில் கோயில்கள் கட்டுவதைக் கவிஞர் தவறாக உரைக்கவில்லை. மாறாக கோயில்கள் கட்டுவதற்காகச் செலவு செய்யப்படுகின்ற பல கோடி பணத்தில் பலவற்றை யுத்தத்தால் பாதிக்கப்பட்டுச் சிதைவடைந்து இருக்கின்ற எம் தமிழர்களின் விடிவுக்காக வழங்குங்கள். அது பல வழிபாட்டுத் தலங்களுக்குச் சமனானது என்கிறார் கவிஞர்.

'வறுமை' என்னும் கவியில் எவர் ஒருவர் தன் பெற்றோருடன் வாழ்கின்றாரோ அவர் வறுமையில் இல்லை என்றும் பல செல்வங்களுடன் அவர்கள் வாழ்வார்கள் என்கிறார் கவிஞர்.

'பனிப்பொழிவின் நடுவே' என்னும் கவிதையில், வெளிநாட்டில் உள்ள எம் புலம்பெயர் சகோதரர்களின் வாழ்வியல் அனுபவத்தைக் கவிஞர் கூறுகிறார். இது கவிஞர் திலக்கினுடைய சொந்த அனுபவமாகவும் இருக்கக்கூடும். கடும் குளிர்கால வாழ்க்கையில் புலம்பெயர் சொந்தங்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். கடும் குளிருக்கு மத்தியிலும் உள்ளமானது கடும் சூட்டில் உள்ளது என்று உணர்த்தியுள்ளார் கவிஞர். எமது புலம்பெயர்ந்த மக்களது மன துன்பங்களை வெளிப்படுத்தியுள்ளார்.

கவிதை வகைகளுள் ஒன்றான அரங்கக் கவிதைகளிலும் து.திலக்கின் வரிகள் கவனிப்பிற்கு உரியவை. மொழிப் பிரவாகம், அதனை ஆற்றொழுக்காக நகர்த்தும் முறை, கவிதைக் கலையாக அதனை வெளிக்கொணர்தல், இவற்றுடன் சேர்த்து கவிதை தாங்கும் உள்ளீடுகளில் கவிஞர் அதிக கவனமெடுப்பதை அவரது கவிதைகள் குறிப்புணர்த்துகின்றன.

மனதின் வைராக்கியத்தை ஊடறுத்துத் தாக்கும் வலிமை கொண்டது 'வலி' என்று தனது 'வலி' கவியில் அவர் முன்வைத்திருப்பது கவிதை காவிவரும் கனதியை நமக்கு உணர்த்துகின்றது. அன்பெனும் அகப்பிணைப்பை அறுத்துப்போடும் ஆற்றல் மிக்க அரிவாளே அகங்காரம்"என்று "அகங்காரம்" கவிதையில் இவரின் வரிகள் தவறுகளுக்கான திருத்தங்களை தம்மிலிருந்து தொடங்கவேண்டும் எனும் உட்பொருளியலை நமக்கு உணர்த்துகிறது. இது வீட்டுக்கும் நாட்டுக்கும் பொருந்தும்.




ஒற்றுமையைக் குலைத்து உட்கலகம் செய்விக்கும் முக்கிய இடமாக அகங்காரமே அமைகிறது. இதனை 'ஆலகால விடம்' என அவர் உருவகிப்பது சாலப் பொருத்தமானதே.

'வீசிவரும் தென்றலோடு எங்கள் வாசத்தைக் கலக்கிறோம் வாழுமந்தச் சிலநாளில் வடிவள்ளித் தெளிக்கிறோம்' என்று 'ரோஜா' கவிதையில் வாழும் காலத்தைவிட, வாழ்க்கை முறையின் சிறப்பை மிகத்தனித்துவமாக உணர்த்தும் திறன் பாராட்டுக்குரியது. 'ஆபத்திலிருந்து அகல்வதுக்கு ஆனவற்றை அறைகூவு' என்று 'ஊடகத்துக்கே' இவர் அறைகூவல் விடுப்பது இவரின் சமூகப் பரிமாணத்திற்குச் சாட்சியான கவிதை எனலாம். இப்படி 'சுதந்திரம்' உள்ளிட்ட பல விடயங்களை இயற்கையை உணர்வுகளை மக்களை வாழ்வியலைக் கடந்துபோன கனத்த விடயங்களை, வரவேண்டிய வசந்தங்களை, அனைத்துக்கும் அடிப்படையான தியாகங்களை, அவை பெற்றுத்தரப்போகும் நம்பிக்கை ஒளிக்கீற்றுக்களை எல்லாம் ஓரினத்தின் பிரதிபலிப்பாய் து.திலக் (கிரி) தனது கவிதைகளில் வரிகளாக்கியுள்ளார். எங்கள் இனத்தின் பெருவலிகளை தன் உணர்வுகளின் வெளிப்பாடாக இவரது எழுத்தாணி பதிவாக்கியிருக்கிறது.

இவரது கவிச் சிதறல்களைப் படிக்கும்போது, அனைத்து மனதை உருகவும், நெகிழவும், வியக்கவும் வைக்கின்றன.

முள்ளிவாய்க்காலின் துயரத்தை இவர் சொல்லும்போது, "முனைகள் எங்கும் மூண்டுவெடித்த உக்கிரப் போரை முடித்து வைத்தது நீதானா?" என அந்த வீரமண்ணிடம் வினாத் தொடுக்கிறார். எமது மண்ணின் தற்போதைய அரசியல் குறித்துப் பேசும்போது, இரத்த ஆறு பாய்ந்த மண்ணில் வாய்ப்பேச்சு அரசியல் சதுரங்கம். திரும்பும் திசையெங்கும் பொய் முகம் இத்தனை முகத்திரையையும் கிழித்திட மெய் முகம் நீயெங்கே ....." என மனம் நொந்து கேட்கின்றார்.

"குரோத உணர்வுகளால் கட்டுண்டு காலாவதியாகிக் கிடக்கிறது மனித மனங்கள்..." என்று இன்றைய மனித உலகின் நிலைப்பாட்டை எடுத்துவைக்கும் இவரது எழுத்தாணி" உள்ளத்தில் ஒன்றிருத்தி உதட்டினில் உன்றுரைப்பதால் மனிதனின் எண்ணக் கலப்படம் எட்டிப்பார்த்து உறங்குகிறார்..." என மனிதர்களைச் சாடுகிறது. இப்படியாகத் தன் சிதறல்களினூடாக எல்லோரதும் சிந்தனைகளைத் தூண்டும் இவரது எழுத்து வாண்மையை காணமுடிகிறது.

வருங்கால சந்ததிக்கு நிறைந்த நல்லொழுக்கங்களை கற்பிக்கும் சிறந்த நூலாக காணப்படுகிறது.



ரத்னகுமார் உமா தர்ஷனி,
நான்காம் வருட இரண்டாம்,
அரையாண்டு,
இந்து நாகரிகத் துறை,
கலை கலாசார பீடம்,
கிழக்கு பல்கலைகழகம்.



# இந்து அறிவியல்

இந்து சமயம் (Hinduism) என்பது இந்தியாவில் தோன்றிய, காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றாகும். இந்து சமயத்திற்கு 'சனாதன தர்மம்' என்ற பெயரும் உண்டு. இதன் பொருள் 'என்றுமுள்ள வாழ்க்கை நெறி' என்பதாகும். இந்து மத உள்ளடக்கங்களில் அறிவியலும் முக்கிய இடத்தினை பெற்று விளங்குகின்றது எனலாம். அந்த வகையில், அறிவியல் (Science) என்பது 'அறிந்து கொள்ளுதல்' என பொருள்படும் இது, scientia எனும் இலத்தீன் சொல்லிலிருந்து பெறப்பட்டதாகும். நவீன அறிவியலில் கணிதவியல், மருத்துவவியல், வானியல், அண்டவியல் என்பன உச்சக்கட்ட வளர்ச்சியைக் கண்டாலும் இந்து மதமானது அவ் அறிவியலுக்கு ஆரம்ப கருத்தாவாகக் காணப்பட்டுள்ளது என்பதைப் பல ஆய்வுகள் எடுத்து காட்டியுள்ளது.

மேலும், இந்த அறிவியலானது காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றெனக் கருதப்படும். இந்து மதத்தின் பல்வேறு சடங்குகள், பழக்கவழக்கங்கள், இலக்கியங்கள், தொல்பொருட்கள் மற்றும் மரபுகளுக்குப் பின்னாலும் அறிவியல் சார்ந்து உள்ளது எனலாம். இதனைக் கேட்க அர்த்தமற்றதாக இருக்கலாம். ஆனால், இதனை ஆழமாகப் பார்க்கையில், இந்த பழக்க வழக்கங்களுக்கான உண்மையான அறிவியல் ரீதியான காரணங்கள் புலப்படும். மேலும், இந்து மத அறிவியல் சிந்தனைகளை ஆரம்பகாலம் தொட்டு தற்காலம் வரை சுமந்து வருகின்றது.


கோயில்களின் அமைவிடமானது பூமியின் காந்த அலைகள் அதிகம் வீசப்படும் இடங்கள் என அறிவியல் ரீதியாக உறுதி செய்யப்பட்டுள்ளது எனலாம். காலத்தால் மிகவும் தொன்மையான உலகின் முக்கிய சமயங்களில் ஒன்றெனக் கருதப்படுகிறது.இந்துக்களுடைய வழிபாட்டில் ஆலயமே மக்களிடத்தில் தெய்வ நம்பிக்கையை ஊக்குவிப்பது. மக்களின் ஆரோக்கிய வாழ்க்கைக்குத் தேவையான மருத்துவத்தையும் வழங்குவதாக விளங்குகிறது. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று' என்பது ஔவை மொழி விஞ்ஞான முறையே மனிதனிடத்தில் மெய்ஞானத்தைத் தோன்ற வழி செய்கிறது. அர்ச்சனைப் பொருள்கள், பிரசாதம், தீர்த்தம், அபிஷேகம், ஒலிக்கப்படும் இசைக்கருவிகள், வழிபாட்டு முறைகள், ஆலயச் சூழல் என யாவற்றிலும் மறைபொருளாக மருத்துத் தன்மைகள் உள்ளன.இவற்றின் மருத்துவகுணமானது பல்வேறு நோய்களைத் தீர்க்கும் வல்லமையுடையதாகவும் விளங்குகின்றன.


இந்து மத வழிபாட்டில் உடலியல் ரீதியான மருத்துவம் பற்றி பார்க்குமிடத்து, கைகூப்பி வணங்குதல் விரல்களின் புள்ளிகள் ஒன்றிணைவதால் மூளை நரம்பு சுற்றுகள் இணைக்கப்பட்டு இதனால் ஒரு அமைதியான உணர்வு ஏற்படுகிறது. தோப்புக்கரணம் போடும் போது, மூளையில் உள்ள செல்கள் புத்துணர்ச்சி அடைவதால் அது நம்மைச் சுறுசுறுப்பாக வைக்க உதவுகிறது. அஷ்டாங்க நமஸ்காரம்-ஆண்கள் நமஸ்கரிக்கும் முறை பஞ்சாங்க நமஸ்காரம் - பெண்கள் நமஸ்கரிக்கும் இரத்த ஓட்டத்தை சீர்படுத்தும். திருநீறு, சந்தனம், குங்குமம் தரித்தல் முக்கிய நரம்பு புள்ளிகளை இணைக்கும் தசைகள் செழுமை அடையும் இரத்த அழுத்தத்தைக் குறைக்கும். 'ஆலயங்கள் எந்தநேரமும் சுத்தமாகக் காணப்படுவதால், எப்பொழுதும் குளிர்மை நிறைந்து காணப்படும். மச்ச மாமிசம் வெப்பம் இதனை உண்டு விட்டு ஆலயத்திற்குச் சென்றால் நோய்க்குத் தள்ளப்படுவீர்கள்' என நவீன விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

மேலும், இந்து மதத்தில் இலைகள், பழங்கள், போன்றவையும் மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகிறது. ஆலய வழிபாட்டில் பழங்கள் கடவுளருக்குப் படையல் வைக்கப்படுகின்றது. தேங்காய்- தேங்காயில் உள்ள கொழுப்பு அமிலங்கள் உடலில் கேட்ட கொழுப்பைக் குறைக்கும். வாழைப்பழம்- வைட்டமின் A உயிர்ச் சத்துக்கு தொற்று கிருமிகளை அழிக்கும் சக்தி இருப்பதால் உடலில் தொற்று நோய் தொற்றாது. தோடம்பழம் பல நாட்களாக வியாதியால் பாதித்துத் தேறியவர்களுக்கு இரவில் தூக்கமில்லாமல் கஷ்டப்படுபவர்கள் நிவாரணம் அளிக்கின்றது. மாம்பழத்தில் வைட்டமின் A உயிர்ச்சத்து நிறைந்துள்ளது. உடலுக்கு நோய் எதிர்ப்புச் சக்தியும் அளிக்கிறது. எலுமிச்சை வைட்டமின் C நிறைந்துள்ளதால் இந்த சிறிய பழத்தில் பொட்டாசியம், போலேட் கல்சியம், மெக்னீசியம் நிறைந்து காணப்படுகிறது.

தெய்வ வழிபாடு முதல் அனைத்து சுப காரியங்களிலும் பல்வேறு வகையான இலைகள் பயன்படுத்தப்படுவதற்கு அந்த இலைகளின் புனிதத்தன்மையே காரணம். இந்து மதத்தில் மட்டுமல்ல, அறிவியலிலும் இலைகளின் முக்கியத்துவம் குறிப்பிடப்பட்டுள்ளது. மா இலை- வாசலில் மா இலை தோரணம். மா இலையைத் தோரணம் கட்டுவதற்குக் காரணம் ஒருவருக்கு ஏற்படும் சுவாச பாதிப்பு மற்றவருக்குப் பரவாமல் தடுக்க, வாழை இலை- மருத்துவ குணம் கொண்டது. இது உணவைச் சீக்கிரமாக செரிமானமடையச் செய்வதுடன், குடல் புண்களையும் ஆற்றுகிறது. (அன்ன தானம்) வாழை இலையில் இருக்கும் குளோரொபில் என்ற வேதிப்பொருள் காணப்படுகின்றது. வில்வ இலை- மஹாதேவுடன் தொடர்புடைய இலை உடலுக்கு அமைதியான உணர்வைத் தரும். இரத்த அழுத்தத்தைச் சீராக வைத்துக் கொள்ள உதவும். வெற்றிலை- புதனின் சின்னமாக வெற்றிலை உள்ளது. நச்சுக்களை வெளியேற்றும் தன்மை கொண்டது. வெற்றிலையில் கல்சியம், இரும்புச் சத்து ஆகியன அதிகம் உள்ளது. எருக்களை இலை- சிவ பூஜையில் எருக்களைக்கு சிறப்பு இடம் உண்டு. தெய்வீக மூலிகை எனப் போற்றப்படும். அதர்வண வேதத்தில், நாரத புராணத்தில், அக்கினி புராணத்தில். துளசி இலை - செடியின் இலைகளை அவ்வப்போது சாப்பிட்டு வந்தால் எந்த நோய்க் கிருமியும் நம்மை அணுகாது. வெப்ப இலை - குளிர்மையானது,நுண்கிருமிகளை அழிக்கும் வல்லமை உடையது.

இந்து மத வழிபாட்டில் நறுமணப் பொருட்களில் மருத்துவம் ஆலயங்களில்






இறை வழிபாட்டின் போது, நறுமணப் பொருட்கள் பயன்படுத்தப்படுகின்றன. ஊதுபத்தி, கற்பூரம் (சூடம்), நெய், அபிஷேகப் பொருட்கள், இயற்கை மலர், இலைதழை போன்றவைகளின் நறுமணம். மனிதனின் மனதையும் உடற் கூறுகளையும் நேர் மறைத் பயன்களைத் தரவல்லது. இந்து மத வழிபாட்டில் திரவப் பொருட்களில் மருத்துவம் மஞ்சள் நீர் நோய்த் தொற்று அணுகாமல் இருக்கத் தெளிக்கப்படும். பஞ்சகாவியம் பால் பசுவின் சிறுநீர், பசுவின் சாணம் பாலிலிருந்து பெறப்பட்ட தயிர், நெய் போன்றவற்றைப் பயன்படுத்திச் செய்யப்படும். இது முக்கியமான ஒரு மருந்து பொருளாகக் காணப்படுவதுடன், மனித குடலை சுத்தப்படுத்துகின்றது.

இந்து மத வழிபாட்டில் ஓசை, இசை வழி மருத்துவம், தேவாரம் ஓதுதல் இதன் மூலம் நரம்பு மண்டலத்தைச் செயற்படுத்துகின்றது. நரம்பு சம்பந்தமான கோளாறுகள் நரம்புத் தளர்ச்சி, அதிர்ச்சி போன்றவற்றை இசையைக் கேட்பதன் மூலம் சீராகின்றது. நாதசுவரம், மேளம் மற்றும் ஏனைய இசைக் கருவிகளிலிருந்து வரும் ஓசை, உடல் சுரப்பிகளைக் கட்டியெழுப்புகிறது. ஆலய மணியை ஒலித்தல் மூளையின் வலது மற்றும் இடது பக்கங்களுக்கு இடையில் இணக்கத்தினை ஏற்படுத்துகின்றது. இதனால் மனம் ஒருமுகப்படுத்த படுகின்றது.

இந்து மத வழிபாட்டில் தியான அறிவியல் ரீதியாக பார்க்கப்படுகின்றது. ஆலய வழிபாட்டுடன் தியானம்,யோக என்பன முக்கிய அம்சங்கள் காணப்படுகிறது. ஆலய வழிபாட்டில் இறைவனைத் தரிசிக்கத் தியானம் முக்கிய விடயமாக கொள்ளப்படுகிறது. தியானம் செய்வதால் மன அமைதி,இரத்த அழுத்தம் குறையும், முக பிரகாசமாய் இருக்கும் என விஞ்ஞானிகள் அறிவியல் ரீதியாகக் கூறியுள்ளனர். சின்முத்திரை வடிவம் தியான செய்யும் போது, பயன்படுத்தப்படுகின்றது. ஒவ்வொரு விரலிலும் ஒவ்வொரு ஆற்றலைக் கொண்டிருக்கிறது. சிறுவிரல் தமஸ் (மன சோர்வு) மோதிர விரல்- ரஜஸ் (செயல்பாடு) நடுவிரல்- சாத்வீகம் (மன சுத்திகரிப்பு) ஆள்காட்டி விரல் -ஆத்மா கட்டைவிரல்- கடவுள் என கூறப்படுகின்றது.

இந்துக்களின் வீட்டில், கிரகணத்தின் போது, வீட்டை விட்டு வெளியே செல்ல அனுமதிப்பதில்லை. அந்த நேரத்தில் கிரகத்தை நேரடியாகப் பார்க்கவும் அவர்கள் அனுமதிக்க மாட்டார்கள். குறிப்பாக இந்நேரத்தில் கர்ப்பிணிப் பெண்கள் வீட்டிற்குள் தான் இருக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் வயிற்றில் உள்ள குழந்தை எந்தவித குறைபாடும் இல்லாமல் பிறக்கும். அதேபோல, கிரகணத்தின் போது உணவருந்தவோ சமைக்கவோ கூடாது எனவும் நம்பப்படுகிறது. சில வீடுகளில் ஒவ்வொரு உணவு பண்டத்தின் மீதும் துளசி இலை போடுவார்கள். இதனால் அந்த உணவுகள் கெட்டுப் போகாமல் இருக்கும் என்பது அவர்களின் நம்பிக்கை. இதிலுள்ள ஒரே பிரச்சனை என்னவென்றால், கிரகணத்தை நேரடியாக உங்கள் கண்களால் பார்த்தால், சூரிய ஒளியின் தீவிரத்தால் உங்கள் விழித்திரை வெகுவாக பாதிக்கப்படும். ஒளி உணர் அணுக்களுக்கும், கம்பிகளுக்கும் பாதிப்பு ஏற்படுவதால், சில நேரங்களில் விழித்திரை எரிச்சல் கூட உண்டாகலாம்.

அத்துடன் கிரகணத்தின் போது, நுண்ணுயிரிகள் முனைப்புடன் செயல்பட்டு உணவுகளைக் கெடச் செய்யும். அதனால் உணவுகளில் துளசி இலையைப் போடும் போது, அதிலுள்ள மருத்துவ குணங்களால் உணவுகள் கெட்டுப் போகாமல் இருக்கும். வடக்கு என்பது சாத்தானின் திசை என்பதே இதற்குப் பின்னணியில் நீங்கள் அறிந்திருக்கும் ஒரே காரணமாக இருக்கும். அதனால் அந்த திசையை நோக்கி தலை வைத்துத் தூங்காதீர்கள் என கூறுவார்கள். இருப்பினும் இதற்குப் பின்னால் உள்ள உண்மையான காரணம் என்னவென்று தெரியுமா? வடக்கு திசையில் தலை வைத்துப் படுக்கும் போது, அது வட துருவம் என்ற காரணத்தினால், உங்கள் தலை ஒரு காந்தமாகச் செயல்படும். தூங்கும் போது வடக்கு திசையை நோக்கி தலை இருந்தால், உடலின் வட துருவமும் பூமியின் வட துருவமும் ஒன்றோடு ஒன்று தள்ளும். இதனால் உங்கள் இரத்த ஓட்டம் பாதிக்கப்படும். இரவு நேரத்தில் அரச மரத்தில் பேய் குடி கொண்டிருக்கும் என்பதெல்லாம் பொய். அந்த நேரத்தில் தான் மரத்திலிருந்து கார்பன் டை ஒக்சைடு வெளிவரும். இது மனிதர்களுக்கு நல்லதல்ல. அதனால் இரவு நேரத்தில் அரச மரம் அருகில் போக வேண்டாம்.

இந்து மதத்தில் பல அறிஞர்கள் மற்றும் புத்திசாலித்தனமான முனிவர்கள் இருந்துள்ளார்கள். அவர்கள் அறிவியல், கணிதம், வானியல், அண்டவியல், மருந்துகள் போன்ற துறையில் செல்வாக்கு பெற்றுக் காணப்படுகின்றார்கள். ஆர்யபட்டா இந்தியக் கணிதம் மற்றும் இந்திய வானியலின் கிளாசிக்கல் காலத்திலிருந்து சிறந்த கணிதவியலாளர்-வானியலாளர்களின் வரிசையில் ஆரியபட்டா முதன்மையானவர். கணிதம் மற்றும் வானியல் பற்றிய பல கட்டுரைகளை எழுதியவர். இவரது முக்கிய படைப்பு, கணிதம் மற்றும் வானியல் ஆகியவற்றின் தொகுப்பான ஆர்யபதியா, இந்தியக் கணித இலக்கியத்தில் விரிவாகக் குறிப்பிடப்பட்டு நவீனக் காலத்திற்குப் பிழைத்துள்ளார். ஆர்யபதியாவின் கணித பகுதி எண் கணிதம், இயற் கணிதம், விமான முக்கோணவியல் மற்றும் கோள முக்கோணவியல் ஆகியவற்றை உள்ளடக்கியது. இது தொடர்ச்சியான பின்னங்கள், இருபடி சமன்பாடுகள், சக்தித் தொடர்கள் மற்றும் சைன்களின் அட்டவணை ஆகியவற்றைக் கொண்டுள்ளது.

பாஸ்கராச்சார்யா ஒரு இந்தியக் கணிதவியலாளர் மற்றும் வானியலாளர் ஆவார். அவரது படைப்புகள் 12ஆம் நூற்றாண்டில் கணித மற்றும் வானியல் அறிவுக்குக் குறிப்பிடத்தக்கப் பங்களிப்பைக் குறிக்கின்றன. அவரது முக்கிய படைப்பான சித்தாந்த ஷிரோமணி முறையே எண் கணிதம், இயற் கணிதம், கிரகங்களின் கணிதம் மற்றும் கோளங்களைக் கையாள்கிறது. கால்குலஸில் பாஸ்கராச்சார்யாவின் பணி நியூட்டன் மற்றும் லெயிப்னிஸை அரை மில்லினியத்திற்கு முன்னதாகக் கொண்டுள்ளது. வேறுபட்ட கால்குலஸின் கோட்பாடுகளின் கண்டுபிடிப்பு மற்றும் வானியல் சிக்கல்கள் மற்றும் கணக்கீடுகளுக்கான அதன் பயன்பாடு ஆகியவற்றில் அவர் குறிப்பாக அறியப்படுகிறார். நியூட்டன் மற்றும் லீப்னிஸ் ஆகியோர் வேறுபட்ட மற்றும் ஒருங்கிணைந்த கால்குலஸைப் பெற்றிருக்கிறார்கள் என்றாலும், வேறுபட்ட கால்குலஸின் சில கொள்கைகளில் பாஸ்கராச்சார்யா ஒரு முன்னோடியாக இருந்தார் என்பதற்கு வலுவான சான்றுகள் உள்ளன. வேறுபட்ட குணகம் மற்றும் வேறுபட்ட கால்குலஸை முதலில் கருத்தரித்தவர் அவர்.

ஆச்சார்யா சரக் மருத்துவ தந்தையாக முடிசூட்டப்பட்டார். இவரது புகழ்பெற்ற படைப்பான 'சரக் சம்ஹிதா' ஆயுர்வேதத்தின் கலைக்களஞ்சியமாகக் கருதப்படுகிறது. அவரது கொள்கைகள், மூலைவிட்டங்கள் மற்றும் குணப்படுத்துதல்கள் இரண்டு ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகும் அவற்றின் ஆற்றலையும் உண்மையையும் தக்கவைத்துக் கொள்கின்றன. உடற்கூறியல் விஞ்ஞானம் ஐரோப்பாவில் வெவ்வேறு கோட்பாடுகளுடன் குழப்பமடைந்தபோது, ஆச்சார்யா சரக் தனது உள்ளார்ந்த மேதை மூலம் வெளிப்படுத்தினார். மற்றும் மனித உடற்கூறியல், கருவியல், மருந்தியல், இரத்த ஓட்டம் மற்றும் நீரிழிவு, காசநோய், இதய நோய் போன்ற நோய்கள் பற்றிய உண்மைகளை விசாரித்தார்.

சம்ஹிதா '100,000 மூலிகை தாவரங்களின் மருத்துவ குணங்கள் மற்றும் செயல்பாடுகளை விவரித்தார். மனம் மற்றும் உடலில் உணவு மற்றும் செயல்பாட்டின் செல்வாக்கை அவர் வலியுறுத்தியுள்ளார். ஆன்மீகம் மற்றும் உடல் ஆரோக்கியத்தின் தொடர்பு நோயறிதல் மற்றும் நோய் தீர்க்கும் அறிவியலுக்குப் பெரிதும் உதவியது என்பதை அவர் நிரூபித்துள்ளார். ஹிப்போகிராடிக் சத்தியத்திற்கு இரண்டு நூற்றாண்டுகளுக்கு முன்னர் மருத்துவ பயிற்சியாளர்களுக்கான நெறிமுறை சாசனத்தையும் அவர் பரிந்துரைத்துள்ளார். ஆச்சார்யா சரக் தனது மேதை மற்றும் உள்ளுணர்வு மூலம் ஆயுர்வேதத்திற்கு முக்கிய பங்களிப்புகளை வழங்கினார். ரிஷி-விஞ்ஞானிகளில் மிகப் பெரிய மற்றும் உன்னதமான ஒருவராக வரலாற்றின் ஆண்டுகளில் அவர் என்றென்றும் பொறிக்கப்பட்டிருக்கிறார்.

மேலும், அண்டத்தில் உள்ளது பிண்டத்தில் உள்ளது என்ற அடிப்படையில் உடலை அணுகும் கண்ணோட்டம் திருமூலருடையது. மனிதனுள் இருக்கும் வெப்பத்தை அதிகரிக்கச் செய்து பல்வேறு ஆற்றல்களை வெளிக் கொணர்வது திருமூலரின் ஞான யோகக் கலையாகும். மனிதனில் மறைந்துள்ள அளப்பரிய ஆற்றலை முறையான ஈடுபாட்டினால் வெளிப்படச் செய்து பயனுறுவது திருமூலரின் அறிவியல் நுட்பமாகும் என்கிறார் நூலாசிரியர். யோகம், தியானம், இசை கேட்பது ஆகியவற்றின் மூலமாகவும் உடல் நலத்தை நடைப்பயிற்சி, மூச்சுப் பயிற்சி மூலமாகவும் மன, உடல் நலத்தைப் பேணலாம் என்பதைத் திருமந்திரத்திலிருந்து பல எடுத்துக்காட்டுகளின் மூலம் இந்நூல் விளக்குகிறது. திருநீறு அணிவதால் ஏற்படும் நன்மைகள், சிறுநீரின் மருத்துவகுணங்கள் கூறப்பட்டுள்ளன. 'உடம்பை வளர்த்தேன் உயிர் வளர்த்தேனே' என்று கூறும் திருமூலர் உடம்பை வளர்க்க எவ்வாறு உண்ண வேண்டும் என்பதற்கான விளக்கத்தையும் கூறியுள்ளார்.
மனமும் உடலும் நலம் பெற இயற்கை சார்ந்த மருத்துவ முறையாக திருமூலர் கூறும் மருத்துவ முறைகள் உள்ளன என்பதை இந்நூல் தெளிவாக விளக்குகிறது.

இவ்வாறு உலகங்களின் தோற்றம், இருப்பு, அவற்றின் ஒடுக்கம், மீண்டும் அவைகளின் தோற்றம், இவற்றின் கால எல்லைகள் பற்றிய உண்மைகள் யாவும் எமது சைவத்தின் அடிப்படை நூல்களான நான்கு வேதங்களிலும், இருபத்தெட்டு ஆகமங்களிலும், இருநூற்றேழு உப ஆகமங்களிலும், நூற்று எட்டு உபநிடதங்களிலும், பதினெட்டு புராணங்களிலும், மகாபாரதம், இராமாயணம் ஆகிய இதிகாசங்களிலும், தேவார, திருவாசகங்கள் உள்ளிட்ட பன்னிரு தமிழ்த் திருமுறைகளிலும், பதினான்கு சித்தாந்த சாத்திரங்களிலும், இவற்றின் வழிவந்த திருப்புகழ், தாயுமானார் பாடல்கள், பண்டார சாத்திரங்கள் போன்ற பல சார்பு மற்றும் வழி நூல்களிலும் மீண்டும் மீண்டும் காலம் காலமாகச் சொல்லப்பட்டு வருகின்றன.

மத்திய ஐரோப்பா

## மத்திய ஐரோப்பாவில் வெள்ளம்:
# 15 பேர் பலி

போரிஸ் புயலால் மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பிய நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.



மத்திய மற்றும் கிழக்கு ஐரோப்பாவில் கனமழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் செக் குடியரசு, போலந்து, ஹங்கேரி, ருமேனியா மற்றும் ஸ்லோவாக்கியா, ஆஸ்திரியா போன்ற நாடுகள் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், வெள்ளத்தால், பல்லாயிரக்கணக்கான மக்கள் தங்கள் இருப்பிடங்களை விட்டு குடிபெயர்ந்துள்ளதுடன், செக் குடியரசில் இரண்டு தசாப்தங்களுக்கு பின்னர் இந்த போரிஸ் புயல் மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.


பல ஆறுகளில் அபாய அளவைக் கடந்து வெள்ளம் பாய்வதால், ஊருக்குள் நீர் புகுந்து பல பகுதிகள் மூழ்கியுள்ளன. இந்த நிலையில், போலந்தில் மழை வெள்ள பாதிப்புகளை தேசியப் பேரிடராக அந்நாட்டு அரசு அறிவித்துள்ளது.

இந்த வெள்ளத்தில் ரோமானியாவில் 6 பேரும், ஆஸ்திரியாவில் 3 பேரும், போலந்தில் 5 பேரும், செக் குடியரசில் ஒருவரும் உயிரிழந்திருப்பதாக அதிகாரப்பூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், செக் குடியரசில் 4 பேர் மாயமாகியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், மத்திய ஐரோப்பாவில் கனமழை பாதிப்புகளால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 15ஆக உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அதேசமயம், பலி எண்ணிக்கை அதிகரிக்கும் எனவும் அஞ்சப்படுகிறது.

வொஷிங்டன்

## சுவாமி நாராயண்
# கோவில் மீது தாக்குதல்



நியூயோர்க்கில் அமைந்துள்ள சுவாமி நாராயண் கோவிலை விஷமிகள் சேதப்படுத்தியுள்ள சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

அமெரிக்காவின் நியூயோர்க்கில் ரொபின்ஸ்வில்லி நகரில், சுவாமி நாராயண் கோவில் அமைந்துள்ளது. இந்த கோவில், அமெரிக்காவின் மிகப்பெரிய இந்து கோவில் எனவும் உலகின் 2ஆவது மிகப்பெரிய கோவில் எனவும் சிறப்பை பெற்றுள்ளது.

இந்நிலையில், கோவிலில் மர்மநபர்கள் சிலர் புகுந்து சேதப்படுத்தியுள்ளனர். இதற்கு அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகம் கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இது குறித்து சமூகவலைத்தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில், 'இது போன்ற செயலை ஏற்றுக்கொள்ள முடியாது. தாக்குதல் நடத்தியவர்கள் மீது விரைவாக நடவடிக்கை எடுக்க வேண்டும். உள்ளூர் மக்களுடன் தொடர்பில் இருக்கிறோம்.

கொடூரமான செயலுக்கு காரணமானவர்கள் மீது உடனடியாக நடவடிக்கையை உறுதி செய்ய அமெரிக்க சட்ட அமலாக்க அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளோம். சமீப காலமாக இந்து கோவில்கள் மீது நடந்து வரும் தாக்குதல் குறித்து விரிவான விசாரணை மேற்கொள்ள வேண்டும்" என குறிப்பிட்டுள்ளது.



மொஸ்கோ

# "காதல் செய்யுங்கள்"

நாட்டில் குறைந்து வரும் பிறப்பு விகிதத்தை அதிகரிக்க, நேரம் கிடைக்கும் போதெல்லாம் காதல் செய்யும்படி ரஷ்ய மக்களுக்கு ஜனாதிபதி புட்டின் வலியுறுத்தியுள்ளார்.

ரஷ்யா நடத்தும் உக்ரைன்னுடனான போருக்கு வீரர்களே கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது. எதிர்காலத்தில் இந்த நிலைமை மோசமாகும் என்று கணிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அந்நாட்டு ஜனாதிபதி புட்டின் கூறியதாவது, "உக்ரைனுடன் நடந்து வரும் போரின் காரணமாக நாட்டின் மக்கள் தொகை குறைந்துள்ளது. இது தேசத்தின் எதிர்காலத்திற்கு பேரழிவு. வேலையில் மிகவும் பிஸியாக இருப்பது சரியான காரணம் அல்ல.இனப்பெருக்கத்திற்கு வேலை ஒரு தடையாக இருக்கக்கூடாது. வேலை செய்யும் இடத்தில் மதிய உணவு மற்றும் காபி இடைவெளியின் போது என நேரம் கிடைக்கும் போதெல்லாம் காதல் செய்து குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும்" இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

பாட்னா

# மோடிக்கு பாலாபிஷேகம்

பிரதமர் மோடியின் பிறந்த நாளான நேற்று (செப்.,17) விஸ்வகர்மா ஜெயந்தியும் கொண்டாடப்படுவதால், பா.ஜ., பிரமுகர் ஒருவர் அவரின் படத்தை விஸ்வகர்மாவாக சித்தரித்து பூஜை மற்றும் பால் அபிஷேகம் செய்யும் காணொளி சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது.

நேற்று (செப்.,17) பிரதமர் நரேந்திர மோடிக்கு 74வது பிறந்தநாள். அதனை முன்னிட்டு நாடு முழுவதும் பா.ஜ., தொண்டர்கள் உற்சாகமாக கொண்டாடி மகிழ்ந்தனர்.

இதேநாளில் விஸ்வகர்மா ஜெயந்தியும் கொண்டாடப்படுகிறது. இந்த நிலையில், பீஹார் மாநிலம் பாட்னாவில் உள்ள வேத பாடசாலையில் பா.ஜ., பிரமுகர் ஒருவர், பிரதமர் மோடியின் படத்தை விஸ்வகர்மாவாக சித்தரித்து பூஜை மற்றும் பால் அபிஷேகம் செய்து வழிபட்டுள்ளார்.




பிரதமர் மோடியை கடவுளாக சித்தரித்து அபிஷேகம் செய்த இந்த காணொளி சமூக ஊடகங்களில் வெளியாகி வைரலாகி வருகிறது. இது குறித்து அந்த பா.ஜ., பிரமுகர் கூறுகையில், "நவீன இந்தியாவின் விஸ்வகர்மா பிரதமர் மோடி தான். அவர் நம் நாட்டை உலகம் முழுவதும் பிரபலப்படுத்தியுள்ளார்" என்றார்.

ஹைதராபாத்

# ஒரு லட்டின் விலை 1.87 கோடி ரூபாய்



தெலுங்கானா மாநிலத்தில் விநாயகர் சதுர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற ஏலத்தில் ஒரு லட்டு இந்திய மதிப்பில் சுமார் 1.87 கோடி ரூபாவுக்கு ஏலம் விடப்பட்டுள்ளது.

தெலுங்கானா-பண்டலகுடா பகுதியில் நடைபெறும் விநாயகர் சதுர்த்தி விழா பிரபலம். இங்கு ஆண்டுதோறும் விழாவின் போது, லட்டு படைக்கப்பட்டு பின்னர், அந்த லட்டு ஏலம் விடப்படும். அதன்படி, சிறப்பு பூஜைகளுக்கு பின்னர் இந்த ஆண்டும் அதே நடைமுறை பின்பற்றப்பட்டது. ஏராளமானோர் கலந்து கொண்டு ஏலம் கேட்டுள்ளனர். கடும் போட்டிக்கு இடையே ஏலத்தில் இந்த லட்டு சுமார் 1.87 கோடி ரூபாவுக்கு விலை போயுள்ளது. இது கடந்தாண்டை விட ரூ.61 இலட்சம் அதிகம் என கூறப்படுகின்றது.



## இன்று ஆரம்பமாகும் டெஸ்ட் தொடர்
# நியூசிலாந்தை வீழ்த்துமா இலங்கை?

இலங்கை, நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரானது காலியில் இன்று 10 மணிக்கு ஆரம்பிக்கவுள்ள முதலாவது டெஸ்டுடன் ஆரம்பிக்கிறது.

சொந்த மண்ணிலேயே இலங்கை பலமானதாகக் காணப்பட்டாலும் நியூசிலாந்து இலங்கைக்கு பலத்த சவாலை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

தினேஷ் சந்திமாலின் உபாதை முழுமையாகக் குணமடையாத நிலையில் சதீர சமரவிக்கிரமவைத் தாண்டி குசல் மெண்டிஸ் அணியில் விளையாடக் கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. கமிந்து மெண்டிஸ் முன்வரிசையில் களமிறங்கவுள்ளார். தவிர ஒஷாத பெர்ணாண்டோவும் களமிறங்கக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன.

பந்துவீச்சாளர்களில் அசித பெர்ணாண்டோ, பிரபாத் ஜெயசூரியவுடன் ரமேஷ் மெண்டிஸ், ஜெஃப்ரி வன்டர்சே களமிறங்குவரென எதிர்பார்க்கப்படுகிறது.

மறுபக்கமாக நியூசிலாந்தைப் பொறுத்த வரையில் மற் ஹென்றி, வில்லியம் ஓ ரூர்கே, அஜாஸ் பட்டேல், மிற்செல் சான்ட்னெர் ஆகியோர் கிளென் பிலிப்ஸ் மற்றும் ரஷின் ரவீந்திரவுடன் டிம் சௌதி இல்லாமல் களமிறங்கும் சந்தர்ப்பமும் காணப்படுகின்றது.

## சிநேகபூர்வ போட்டியில்
# புத்தளம் லிவர்பூல் வெற்றி

எம்.யூ.எம்.சனூண்




புத்தளம் மாவட்ட விளையாட்டு அரங்கில் சனிக்கிழமை (14) நடைபெற்ற பரஹதெனிய லெவிண் ஸ்டார்ஸ் அணியுடனான சிநேகபூர்வமான கால்பந்தாட்ட போட்டியில் 1-0 என்ற கோல் கணக்கில் புத்தளம் லிவர்பூல் அணி வென்றது. லிவர்பூல் சார்பாகப் பெறப்பட்ட கோலை முஹம்மது முப்தாஸ் பெற்றிருந்தார்.



## ஐந்து தொடர் வெற்றிகளுடன் மாவட்ட குழுநிலை
# மாத்தளை சாஹிரா சம்பியன்

அஸ்ஹர் இப்றாஹீம்

இலங்கை பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தால் நடத்தப்படும் 17 வயதுக்கு உட்பட்டோருக்கான 50 ஓவர்கள் மட்டுப்படுத்தப் பட்ட கிரிக்கெட் போட்டியின் லீக் தொடரின் இறுதிப் போட்டியில், மாத்தளை சாஹிராக் கல்லூரி சம்பியனானது.

மாத்தளை சென் தோமஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற மாத்தளை சிறிமாவோ பண்டாரநாயக கல்லூரியுடனான இறுதிப் போட்டியில் வென்றே சாஹிரா சம்பியனானது.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சாஹிரா 34.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 234 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 235 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய சிறிமாவோ பண்டாரநாயக்க கல்லூரி, 47.1 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து, 191 ஓட்டங்களையே பெற்று, 43 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

சாஹிராக் கல்லூரியானது மாத்தளை சிங்கள பௌத்த கல்லூரி, மாத்தளை கிறிஸ்துதேவ கல்லூரி, மாத்தளை நாவுல ஸ்ரீநாக கல்லூரி, மாத்தளை கைக்காவல மத்திய கல்லூரி, பண்டாரநாயக்க கல்லூரி என்பவற்றை வெற்றி கொண்டதன் மூலம் மாத்தளை மாவட்ட குழுநிலை சம்பியன்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளது.

## கிழக்கு மெய்வல்லுநர் விளையாட்டுப் போட்டி
# தேசியத்துக்குத் தெரிவு




அஸ்ஹர் இப்றாஹீம், அஸ்லம் மௌலானா

கிழக்கு மாகாண மெய்வல்லுநர் போட்டியானது மட்டக்களப்பு வெபர் விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றபோது, 14 வயதுக்குட்பட்ட ஆண்களுக்கான 60 மீற்றர் ஓட்டத்தில் கல்முனை சாஹிரா தேசிய கல்லூரியின் ஏ.ஆர்.எம்.றிஹாப் முதலிடத்தைப் பெற்று தேசிய மட்டப் போட்டிக்குத் தெரிவாகியுள்ளார்.

## புறக்கோட்டை முதலாம் குறுக்குத் தெரு
# கிரிக்கெட் சம்பியன் ரீமாஸ் அணி



புறக்கோட்டை சமூக பொலிஸ் பிரிவும், புறக்கோட்டைமுதலாம் குறுக்குத் தெரு சுய தொழிலாளர்கள் சங்கமும் இணைந்து மூன்றாவது தடவையாகவும் திங்கட்கிழமை(16) நடத்திய எல்.டபிள்யூ.பெரேரா ஞாபகார்த்த மென்பந்து கிரிக்கெட் கிண்ணத்தை 28 ஓட்டங்களால் ரீமாஸ் அணி தன் வசப்படுத்தியது.

ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை சந்திரா சில்வா மைதானத்தில் நடைபெற்ற 12 அணிகள் பங்குபற்றிய இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு ரீமாஸ் மற்றும் பிரின்ஸ் சேலஞ்சர்ஸ் அணிகள் தகுதி பெற்றன.

மின் ஒளியில் நடைபெற்ற இறுதிப் போட்டியில், நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற பிரின்ஸ் செலஞ்சர்ஸ் முதலில் களத்தடுப்பை தேர்வு செய்ததுடன், போட்டியின் ஆரம்பம் முதலே அதிரடியாக ஓட்டங்களை குவித்த ரீமாஸ் அணி மூன்று விக்கெட்டுகள் இழப்பிற்கு 53 ஓட்டங்களை பெற்றது.

துடுப்பாட்டத்தில் எம்.சப்ராஸ் 19 ஓட்டங்களையும் டபிள்யூ.டி.தனுஷ்க 17 ஓட்டங்களையும் பெற்றனர்.

பிரின்ஸ் செலஞ்சர்ஸ் பந்துவீச்சில் என். லசன்த் 9 ஒட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

54 இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய பிரின்ஸ் செலஞ்சர்ஸ், நான்கு விக்கெட்டுகள் இழப்பிற்கு 25 ஓட்டங்களை குவித்து 28 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

ஐக்கிய தேசிய சுய தொழிலாளர்கள் சங்கத்தின் தலைவர் பிரதீப் சார்ள்ஸ் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட நிகழ்வில், சம்பியன் கிண்ணத்தை வென்ற அணிக்கு எல்.டபிள்யூ.பெரேரா ஞாபகார்த்த கிண்ணமும் ஏனைய பரிசுகளும் இரண்டாம் இடத்தைப்பெற்ற அணிக்கு கிண்ணமும் ஏனைய பரிசுகளும் வழங்கப்பட்டன.

இறுதிப் போட்டியின் ஆட்ட நாயகனாக ரீமாஸ் அணியின் எம்.சப்ராஸ் தெரிவானார். தொடரின் சிறந்த பந்து வீச்சாளர் மற்றும் தொடரின் சிறந்த வீரர் ஆகிய இரண்டு விருதுகளையும் டபிள்யூ.டி.தனுஷ்க தன்வசப்படுத்தினார்.

பிரின்ஸ் சேலஞ்சர்ஸ் அணியின் என்.லசந்த் தொடரின் சிறந்த துடுப்பாட்ட வீரரானார்.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் புதன்கிழமை, 18 செப்டெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.